அகஸ்தீஸ்வரம்

ஜே.சி. டேனியல்

எஸ்.டி. பாண்டியனார்

ஆறுமுகப் பெருமாள்

அகஸ்தீஸ்வரம்

ஜே.சி. டேனியல்

எஸ்.டி. பாண்டியனார்

ஆறுமுகப் பெருமாள்

தி. லஜபதிராய்

வழக்கறிஞர்

"டால் ஸ்டாய் வில்லா"

மனை எண் 593, கே.கே.நகர், மதுரை-20.

செல்பேசி 98432 - 51788

தொலைபேசி 0452 - 4391788

பொருடளக்கம்

1.	ஜே.சி. டேனியல்	5
2.	எஸ்.டி. பாண்டியனார்	16
3.	ஆறுமுகப் பெருமாள்	37

முன்னுரை

அகஸ்தீஸ்வரம்

ஜே.சி. டேனியல்

எஸ்.டி. பாண்டியனார்

ஆறுமுகப் பெருமாள்

20 ஆம் நூற்றாண்டில் அகஸ்தீஸ்வரத்தில் வாழ்ந்த மூன்று பெரியவர்கள் குறித்து ஒரு தொகுப்பு வெளியிட வேண்டும் என நண்பர்கள் விரும்பிய வண்ணம் இத்தொகுப்பு வெளியிடப்படுகிறது. அகஸ்தீஸ்வரம் ஊரில் தற்போதைய தலைமுறையினருக்கு ஜே.சி.டேனியல் குறித்தோ, ஆறுமுகப் பெருமாள் நாடார் குறித்தோ, எஸ்.டி. பாண்டியனார் குறித்தோ தெரிய வாய்ப்பில்லை ஜே.சி. டேனியல் சினிமாத் துறையிலும் எஸ். பாண்டியனார் கல்விப் பணியிலும் ஆறுமுகப் பெருமாள் அவர்கள் நாட்டு புறக் கலைகள் குறித்த எழுத்தாளராகவும் பதிப்பாளராகவும் வாழ்ந்துள்ளனர். அகஸ்தீஸ்வரம் ஊரில் திறமையான பலர் குறிப்பிடப்பட வேண்டியவர்கள், வணிக மற்றும் அரசியலில் திரு. வசந்தகுமார் அரசியல் ரீதியாக திரு. குமரி அனந்தன் மருத்தவ துறையில் மக்கள் தொண்டிலும் டாக்டர் C. குமாரசாமி மற்றும் அவரது துணைவியார் டாக்டர். திருமதி. ஞானசௌந்தரி, அவர்கள் பறவைகள் குறித்த ஆராய்ச்சியாளர் திரு. அ. பாலச்சந்திரன், 65 சிறந்த நூல்களை எழுதி வெளியீட்ட நண்பர் எஸ் அனந்தகுமார், இன்னும் பல எழுத்தாளர்கள், நாடக மேதைகள், வில்லிசைக் கலைஞர்கள், நாதஸ்வர கலைஞர்கள் மருத்துவத்துறை வல்லுனர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், ஆசிரியர்கள் ஆகியோர்களை சாதி மத எல்லைகளைக் கடந்து கூறிக் கொண்டே போகலாம். நண்பர்கள் சிலர் இது குறித்து ஒரு முழுமையான வெளியீடு கொண்டு வர வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். இருப்பினும் தன்னலமற்று வாழ்ந்து அகஸ்தீஸ்வரத்தில் வாழ்ந்த புகழ்பெற்ற மூன்று பெரியோர்கள் முக்கியமாக வரலாற்றின் பக்கங்களில் குறிப்பிட்ட வேண்டியவர்கள். அகஸ்தீஸ்வரத்தின் வருங்காலத்

தலைமுறையினர் அவர்களை பற்றி அறிந்து கொள்வது அவசியம் என எண்ணியதால் முன் முயற்சியாக இந்த மூன்று பெரியோர்கள் குறித்த கட்டுரைத் தொகுப்பு வெளியாகிறது அதில் எஸ்.டி. பாண்டியனார் நினைவுக் குறிப்பு அவரால் எழுதப்பட்டது. எவ்வித பெரிய மாற்றமும் செய்யப்படாமல் 2006ல் வெளியிடப்பட்ட கட்டுரை மறு வெளியீடாக வெளிவருகிறது. ஜே.சி. டேனியில் குறித்த கட்டுரை எழுத்தாளர் சாத்தன் விளை திரு. M. தினேஷ் பாண்டியன் அவர்களால் எழுதியது, ஆறுமுகப் பெருமாள் கட்டுரை எழுத்தாளர் திரு. அ.க.பெருமாள் அவர்கள் எழுதப்பட்டது. இரண்டு கட்டுரைகளுமே உயிர்மை பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்டு வாசகர்களின் வரவேற்பை பெற்றவை. இந்த மூவர் குறித்த கட்டுரைகளை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றோம். அவர்கள் வாழ்ந்த காலப்படி கட்டுரைகள் வரிசை படுத்தப்பட்டுள்ளன.

தி. லஜபதிராய்

வழக்கறிஞர்

"டால் ஸ்டாய் வில்லா"

மனை எண் 593, கே.கே.நகர், மதுரை-20.

செல்பேசி 98432 - 51788

தொலைபேசி 0452 - 4391788

இடம் : மதுரை

தேதி : 20-04-2010

ஜே. சி. டேனியல் 28-11-1900 – 28-04-1975

(~~1893~~ 1900-1975)

மலையாள சினிமாவுக்கு வித்திட்ட தமிழன்

– ந. தினேஷ்பாண்டியன்

இந்திய மொழித் திரைப்படங்கள் புராணக் கதைகளிலும் நாடக பாணியிலும் சிக்குண்டு கிடந்த கருணத்தில் சமூக யதார்த்த வாழ்வை பிம் பங்களாக்கி மலையாள சினிமா உயரிய மதிப்பினைப் பெற்றது. மலையாள சினிமாவானது கேரள மக்களின் பிராதன பொழுது போக்கு அம்சமாக மட்டுமில்லாமல் இந்திய சினிமாவின் பெருமைக்குரிய கூறுகளுள் ஒன்றாகவும் திகழ்கிறது. இந்தியாவில் சினிமா அறிமுகமான காலகட்டத்தில் மலையாள மொழியில் திரைப்படங்களைத் தயாரிக்கும். பணிக்கு தமிழ்த் திரைப்பட துறையினரே வித்திட்டனர்.

கன்னியாகுமரி தமிழரான ஜே.சி. டேனியல் தானே நடித்து, இயக்கி தயாரித்த மலையாள மொழியின் முதல் சினிமாவான "விகதகுமாரன்" கேரள பழைமைவாத சமூகத்தின் எதிர்ப்பைச் சந்தித்தது. 1930 ஆம் ஆண்டு அக்டோபார் மாதம் 23ம் நாள் மலையாள மொழியின் முதல் திரைப்படத்தின் முதல் காட்சி திரையிடப்பட்ட போது எதிர்ப்பாளர்கள் திரையின் மீது கற்களை வீசி, திரையைக் கிழித்து காட்சியைப் பாதியிலேயே நிறுத்தச் செய்தனர். கேரளாவைச் சேர்ந்த பெண் ஒருவர் இந்த திரைப்படத்தில் நடித்ததை ஏற்றுக் கொள்ள முடியாத பழைமை வாதிகள். அன்றிரவே அந்த நடிகையின் வீட்டையும் தீ வைத்துக் கொளுத்தினர்.

தனது திரைப்படத் தயாரிப்பிற்காக சொத்துக்கள் அனைத்தையும் இழந்து வறுமை நிலைக்குத் தள்ளப்பட்ட, டேனியல் தனது வாழ்நாளில் எந்த விதமான அங்கீகாரத்தையும் பெறாமலேயே காலமானார். முதுமைக் காலத்தில் மாதந்தோறும் 300 ரூபாய் ஒய்வூதியமாகத் தருமாறு டேனியல் விடுத்த கோரிக்கை மனுவை நிராகரித்த கேரள அரசு, அவர் மறைத்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு "மலையாள சினிமாவின் தந்தை" என்று அவரை அங்கீகரித்தது.

குமரி முனைக்கு அருகாமையில் உள்ள அகஸ்தீஸ்வரம் கிராமத்தில் தமிழ் கிறிஸ்தவக் குடும்பம் ஒன்றில் 1900 ஆம் ஆண்டு பிறந்த ஜோசப் செல்லையா டேனியல், திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் பயின்றவர் இவரது தந்தை ~~ஞானம்புரம்~~ ஞானய்யாவும் ஜோசப் டேனியல் லண்டன் சென்று மருத்துவம் பயின்றவர். திருவனந்தபுரத்தில் அரசு தலைமை மருத்துவராகவும் இருந்தவர். டேனியலுக்கு சிறு வயது முதலே தற்காப்புக் கலைகளான சிலம்பாட்டம், களரிப்பயிற்று போன்றவற்றின் மீது அதிக ஈடுபாடு இருந்தது. தற்காப்புக் கலைகள் மீது அவருக்கு இருந்த ஈடுபாடே திரைப்படக் கலை நோக்கி அவரைத் திருப்பியது. நமது பாரம்பரிய தற்காப்புக் கலைகள் மீது மேலை நாட்டவரின் கவனத்தை ஈர்க்கவேண்டும் என்ற ஆர்வமும் அவருக்கு இருந்தது. இதற்காகவே. ~~1916ல்~~ தனது 22வது

வயதில் Indian Art of Fencing and Sword Play (இந்திய வாள் வீச்சுக் கலை) என்ற ஆங்கில நூலையும் எழுதினார். அதோடு மட்டும் திருப்தியடையாத அவர் தற்காப்புப் பயிற்சிகளைத் திரைப்படமாகப் பதிவு செய்து ஆவணப்படுத்தவும் விரும்பினார். இதன் மூலம் இந்தக் கலைகளின் பயிற்சிமுறைகளை பத்திரப்படுத்துவதுடன், மற்றவர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் ஏதுவாக இருக்கும் என்று அவர் கருதினார்.

அந்தக் காலகட்டத்தில் இந்தியாவில் ஒலிப்பதிவுடன் கூடிய பேசும் படங்கள் அறிமுகாகியிருக்க வில்லை. சென்னையிலும் மும்பையிலும் மட்டும் சில நிறுவனங்கள் ஒலியற்ற படங்களைத் தயாரித்து வந்தன. இந்தப் படங்கள் திரையிடப்படும் போது, கதை சொல்லி ஒருவர் உரத்த குரலில் காட்சிகளை விவரித்துக் கொண்டிருப்பார். வெளிநாடுகளுக்குச் சென்று திரைப்படப் பயிற்சி பெற்று வந்தவர்களே சென்னயிலும், மும்பையிலும் திரைப்படங்களைத் தயாரித்து வந்தனர்.

தற்காப்புக் கலைகளை ஆவணப் படமாக எடுக்க விரும்பிய டேனியல் சென்னை மற்றும் மும்பையிலுள்ள திரைப்படத் தயாரிப்பு நிறுவனங்களுக்குக் கடிதம் அனுப்பினார். 2000 அடி நீளப் படச்சுருளில் படம் எடுக்க விரும்புவதாகவும், அதற்குகுத் தேவைப்படும் செலவு விபரங்களை தனக்குத் தெரிவிக்குமாறும் கடிதத்தில் தெரிவித்திருந்தார். சென்னை நிறுவனம் 20,000 ரூபாயும், மும்பை நிறுவனம் 50,000 ரூபாயும் கேட்டு டேனியலுக்கு பதில் கடிதம் அனுப்பியிருந்தன. அந்தக் காலத்தில் பத்தாயிரம் ரூபாய் என்பது இன்றைக்கு ஒரு கோடி ரூபாய் மதிப்பு கொண்டதாகும்.

திரைப்பட நிறுவனங்கள் கேட்டதொகை மிகவும் அதிகமாக இருந்ததால், டேனியல் திரைப்படத் தயாரிப்பு குறித்த விபரங்களை நேரடியாகச் சென்று தெரிந்து கொள்வது என முடிவு செய்து திருவனந்தபுரத்தில் இருந்து சென்னைக்குப் பயணமானார். ஆனால் சென்னையில் அவருக்கு எவரும் உதவ முன்வரவில்லை. திரைப்பட ஸ்டுடியோக்களில் அவரை உள்ளே அனுமதிக்க மறுத்துவிட்டனர்.

சென்னையை அடுத்து மும்பை சென்ற டேனியலுக்கு அங்கும் ஏமாற்றமே மிஞ்சியது. இந்நிலையில் தான் ஒரு ஆசிரியர் என்றும், மும்பையைப் பற்றியும், திரைப்படம் பற்றியும் தமது மாணவர்களுக்கு எடுத்துக் கூறும் விதத்தில் தகவல் சேகரிப்பிற்காக மும்பை வந்துள்ளதாகவும் டேனியல் பொய் சொல்லி, ஒரு ஸ்டுடியோவில் நுழைவதற்கான அனுமதியைப் பெற்றுவிட்டார். ஒருநாள் முழுவதும் அந்த ஸ்டுடியோவில் இருந்த அவர், திரைப்படத் தயாரிப்பிற்குத் தேவையான கருவிகள் குறித்து மேலோட்டமாகத் தெரிந்து கொண்டார்.

இந்த அனுபவம் சொந்தமாக ஒரு ஸ்டுடியோவை நிர்மாணிக்கும் எண்ணத்தை டேனியலுக்குத் தோற்றுவித்தது. அத்துடன் தான் எடுக்கவிரும்பும் ஆவணப்படம் லாபகரமானதாக இருக்காது என்பதையும் அவர் புரிந்து கொண்டு, வணிக ரீதியாக வெற்றி பெறும் வகையில் நல்ல கதையம்சம் உள்ள வெகுஜன சினிமாவை முதலில் எடுப்பது என்று முடிவோடு திருவனந்தபுரம் வந்து சேர்ந்தார்.

தனது திட்டத்திற்காக ஒரு இலட்சம் ரூபாயைத் திரட்ட முடிவு செய்த டேனியல் தனது நண்பர் ஒருவரைப் பங்குதாரராக இணைத்துக் கொண்டு அவரிடம் ஐம்பது ஆயிரம் ரூபாய்க்கான ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார், தனது சொத்துக்கள் சிலவற்றை விற்று ஐம்பதாயிரம் ரூபாய் பணத்துடன் திரைப்படத் தயாரிப்புக் கருவிகளை வாங்குவதற்காக கல்கத்தா சென்றார். இரண்டு மாத காலத்தில் கேமிரா, புரொஜெக்டர் உள்ளிட்ட கருவிகளுடன் ஊர் திரும்பிய டேனியலுக்கு வேறொரு ஏமாற்றம் காத்திருந்தது. அவருடன் ஒப்பந்தம் செய்து கொண்ட நண்பர் பணத்தைத் திரும்பப் பெறுவதாகக் கூறி ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டார். ஆனால், நம்பிக்கை இழக்காத டேனியல் தனது குடும்ப பூர்வீகச் சொத்தில் தனக்குச் சேரவேண்டிய பங்கினை விற்பனை செய்து போதிய நிதியைத் திரட்டிக் கொண்டார். 1928 ஆம் ஆண்டு திருவனந்தபுரம் பட்டம் பகுதியில் "திருவனந்தபுரம் பட்டம் பகுதியில் திருவாங்கூர் நேஷனல் பிச்சர்ஸ்'' என்ற பெயரில் கேரளாவின் முதல் திரைப்பட ஸ்டுடியோவைத் தொடங்கினார்.

அடுத்தபடியாக தனது திரைப்படத்திற்கான கதையை உருவாக்கும் சிந்தனையில் மூழ்கினார் டேனியல். அந்தக் காலகட்டத்தில் புராணக் கதைகளே திரைப்படமாக எடுக்கப்பட்டு வந்த நிலையில், சமூகக் கதை ஒன்றைப் படமாக்க விரும்பினார் டேனியல். அவர் உருவாக்கி கதை இவ்வாறு செல்கிறது. இலங்கையில் தேயிலைத் தோட்டத் தொழிலாளியாகப் பணிபுரியும் பூதநாதன். திருவனந்தபுரத்தைச் சேர்ந்த செல்வந்தர் ஒருவரின் மகனைக் கடத்திக் கொண்டு போய்விடுகிறான். சிறுவயதில் இருந்தே தேயிலைத் தோட்டத்தில் தொழிலாளியாக வளரும் சந்திரகுமார், தோட்ட மேற்பார்வையாளராக பதவி உயர்வு பெறுகிறான். சந்திரகுமாரின் உறவினரான ஜெயசந்திரன் உயர் கல்விக்காக திருவனந்தபுரத்தில் இருந்து லண்டன் செல்லும் வழியில் கொழும்பு வருகிறார். பூதநாதனும் அவனது கூட்டாளிகளும், கொழும்பில் ஜெயச்சந்திரனின் உடைமைகளைத்திருடிச் சென்றுவிடுகிறார்கள். கொழும்பில் பணமின்றிப் பரிதவிக்கும் ஜெயச்சந்திரன் தேயிலைத் தோட்டம் ஒன்றில் தொழிலாளியாகச் சேருகிறான். அங்கு சந்திரகுமாரும், ஜெயச்சந்திரனும் நல்ல நண்பர்களாகிவிடுகின்றனர். ஆனால், இருவரும் உறவினர் என்று தெரியாமலே உள்ளது சில ஆண்டுகள் கழித்து நண்பர்கள் இருவரும் திருவனந்தபுரம் வருகின்றனர். அங்கு ஜெயச்சந்திரனின் சகோதரி சரோஜினியுடன் சந்திரகுமாருக்குக் காதல் அரும்புகிறது. இந்நிலையில் திருவனந்தபுரம் வரும் பூதநாதனும் அவனது கூட்டாளிகளும் சரோஜினியைக் கடத்த முயலும் போது நண்பர்கள் இருவரும் அந்த கும்பலுடன் சண்டையிட்டு சரோஜினியைக் காப்பாற்றுகின்றனர். இந்தச் சண்டையின் போது சந்திரகுமாரின் உடலில் இருக்கும் மச்சம் ஒன்றை சரோஜினி கவனித்து சந்திரகுமாரின் பெற்றோருக்குத் தெரியப்படுத்துகிறார். இறுதியில் சந்திரகுமார் தனது குடும்பத்துடன் இணைந்து சரோஜினியை மணமுடிக்கிறார்.

காதல், கடத்தல், கொள்ளை, அடிதடி என்று ஒரு வெகுஜன சினிமாவுக்கான அனைத்து அம்சங்களுடன் டேனியல் தனது கதையை வடிவமைத்து விகதகுமாரன் என்ற பெயரிட்டார். விகதகுமாரன் என்பதற்கு தமிழில் காணாமல் போன மகன் என்று பொருள்படும்.

ஸ்டியோ நிர்மானப் பணிகளும் நிறைவடைந்து கதையும் தயாரான நிலையில் அக்காலத்தில் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சந்தித்த பிரச்சினைகளை டேனியலும் சந்தித்த பிரச்சினைகளை டேனியலும் சந்திக்க நேரிட்டது. அது நடிகையை ஏற்பாடு செய்வது குறித்த பிரச்சினையாகும். அக்காலத்தில் நாடகங்களில் பெண்கள் நடிப்பதே இழிவாகக் கருதப்பட்டதால் பெண்கள் நடிக்கத் தயங்கினர். பெரும் பாலான நாடகங்களில் ஆண்களே பெண் வேடமிட்டு நடித்தனர். சினிமாவில் நடிப்பது என்பது நாடகத்தைவிட இழிவாகக் கருதப்பட்டது. ஆங்கிலோ இந்தியக் குடும்பப் பெண்மணிகளே சினிமாவில் நடிக்க முன்வந்தனர்.

தனது திரைப்படத்திற்கு நடிகை ஒருவரை ஏற்பாடு செய்து தரும்படி வேண்டுகோள் விடுத்து டேனியல் சென்னை மற்றும் மும்பையில் உள்ள திரைப்பட நிறுவனங்களுக்குக் கடிதம் அனுப்பினார்.

மாதங்கள் பல கடந்த நிலையில் மும்பையைச் சேர்ந்த மிஸ். லானா என்ற ஆங்கிலோ இந்தியப் பெண்மணி தங்கள் படத்தில் நடிக்கத் தயாராக இருப்பதாக டேனியலுக்குத் தகவல் கிடைத்தது. உடனே டேனியல் மும்பை சென்று அந்தப் பெண்மணியை சந்தித்தார். அந்தப் பெண்ணோ மிக அதிகமாக ஐந்தாயிரம் ரூபாய் ஊதியம் கேட்டதால் டேனியல் ஏமாற்றத்துடன் ஊர் திரும்பினார். ஆனால், வேறு நடிகைகள் யாரும் கிடைக்காததால் மிஸ். லானா கேட்ட ஐந்தாயிரம் ரூபாய் பணத்துடன் மும்பை சென்று லானாவை கையோடு அழைத்து வந்தார்.

திருவனந்தபுரம் வந்த சேர்ந்தவுடன் டேனியலுக்கு அந்த நடிகையால் புதிய பிரச்சினைகள் ஏற்பட்டன. தங்கும் இடத்திற்குக் காரில் தான் வருவேன் என்று அந்த நடிகை அடம்பிடித்தார். அந்தச் சமயத்தில் திருவனந்தபுரத்தில் இருவரிடம் மட்டுமே கார் இருந்ததது. திருவிதாங்கூர் அரச குடும்பத்தாரிடமும் மரக்காயார் என்ற வணிகரிடமும் மட்டும் கார்கள் இருந்தன. இறுதியில் மரக்காயாரிடம் இருந்த காரை ஏற்பாது செய்து லானாவை ஒரு சிறிய வீட்டுக்கு அழைத்துச் சென்றார். ஆனால் அந்த வீட்டில் தங்க மறுத்த லானா தனக்கு பங்களா ஒன்றை ஏற்பாடு செய்து தரவேண்டுமென அடம்பிடித்ததால் இருவருக்குமிடையே தகராறு ஏற்பட்டது. பிரச்சினை வலுக்கவே லானா டேனியலிடம் வாங்கிய ஐந்தாயிரம் ரூபாயை திருப்பித்தராமலேயே மும்பைக்குக் கிளம்பிச் சென்றுவிட்டார், இந்தச் சம்பவத்தால் மனவருத்தம் அடைத்திருந்த டேனியலுக்கு விகதகுமாரனில் வில்லனாக நடித்த ஜான்சனிடம் இருந்து வேறொரு உற்சாகமான தகவல் கிடைத்தது. திருவனந்தபுரத்தில் தைக்காடு பகுதியைச் சேர்ந்த ரோசி என்ற பெண் நடிக்க முன்வந்ததையடுத்து சரோஜினி கதாபாத்திரத்தில் ரோசி நடித்தார்.

ரோசி திரைப்படத்தில் நடிப்பதாகத் தகவல் பரவியவுடன் பொது மக்கள் மத்தியில் எதிர்ப்பு கிளம்பியது. ரோசி ஊராரின் வசைகளுக்கு ஆட்படவேண்டியிருந்தது. பட்டம் பகுதியில் அமைந்துள்ள சாரதா விலாஸ் கட்டிடத்தில் டேனியல் படப்பிடிப்பு பணிகளைத் தொடங்கினார். சிறுவயது சந்திரகுமார் கதாபாத்திரத்தில் டேனியலின் மூத்த மகன் சுந்தரம் டேனியல் நடித்தார். ஜெயச்சந்திரன் கதாபாத்திரத்தில் டேனியல் நடித்தார். சூரிய ஒளியிலேயே படப்பதிவு செய்த டேனியல், இயக்கம், படத்தொகுப்பு உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் தான் ஒருவரே தனிநபராக இருந்து செய்து முடித்தார்.

1930 ஆம் ஆண்டு அக்டோபர் 23ஆம் தேதி திருவனந்தபுரம் கேப்பிட்டால் அரங்கில் திரையிடப்பட்ட விகதகுமாரன் படத்தை உள்ளூரில் பிரபல வழக்கறிஞராக இருந்த மல்லூரார் கோவிந்தபிள்ளை தொடங்கி வைத்தார். படம் தொடங்கியதில் இருந்தே பார்வையாளர்கள் சிலர் ரோசிக்கு எதிராக கத்திக் கொண்டே இருந்தனர். காட்சி ஒன்றில் கதாநாயகன், கதாநாயகியின் தலைமுடியிலிருந்து பூ ஒன்றை எடுத்து நுகரும் போது கலகக்காரர்களின் ஆத்திரம் அதிகரித்தது, திரையின் மீது சரமாரியாக கற்களை வீசினர். புரொஜெக்டரை இயக்கிக் கொண்டிருந்தவர்கள் மீதும் கற்கள் வீசப்பட்டன. கல்வீச்சில் திரை கிழிந்ததால் படக்காட்சி பாதியிலேயே நிறுத்தப்பட்டது. தனது திரைப்படத்தை தொடர்ந்து திரையிடுவதற்காக டேனியல் காவல்துறையினரின் உதவியை நாடினார். அத்துடன் ரோசிக்கும் போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட்டது.

ரோசி மீது ஆத்திரம் கொண்ட கும்பல் ஒன்று அவரது குடிசை வீட்டிற்குத் தீ வைத்தது. வெளியில் சுதந்திரமாக நடமாட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்ட ரோசி பாதுகாப்புக் கருதி தனது காதலருடன் தமிழ்நாட்டில் அடைக்கலம் புகுந்துவிட்டார். திருவனந்தபுரத்தையடுத்து நாகர் கோவில், கொல்லம், ஆலப்புழை, திருச்சூர், தலச்சேரி ஆகிய இடங்களில் விகதகுமாரன் திரையிடப்பட்டது. ஆலப்புழையில் மட்டுமே நல்ல வரவேற்பு இருந்ததாகவும் மற்ற இடங்களில் போதிய வசூல் ஆகவில்லை என்றும் கூறப்படுகிறது. விகதகுமாரன் ஒரு தோல்விப்படமாக அமைந்ததால் டேனியல் பெரும் நஷ்டத்தை சந்தித்ததுடன் பலரிடம் கடன் வாங்கும் நிலைக்கும் தள்ளப்பட்டார். தோல்வியிலும் மனம்தளராத டேனியல் தனது நீண்டநாள் கனவான தற்காப்புக்கலைகள் குறித்த ஆவணப்படத்தை எடுக்கும் முயற்சியில் இறங்கினார். "அடிமுறை மர்மம்" என்ற தலைப்பில் சிலம்பாட்டம், களரிப்பயிற்று உள்ளிட்ட தற்காப்புக் கலைகளின் செய்முறைகளை படச்சுருளில் பதிவு செய்து வந்தார்.

இரண்டு ஆண்டுகளில் பெரும் கடன்சுமைக்குத் தள்ளப்பட்ட டேனியல் திரைப்படத்துறைக்கு விடைக் கொடுக்கும் முடிவுக்கு வந்தார். தனது ஸ்டுடியோ மற்றும் திரைப்படத் தயாரிப்புக் கருவிகள் அனைத்தையும் விற்கவேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டார். குடும்பச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தனது தந்தையைப் போல்

மருத்துவத் தொழிலில் இறங்கத் தீர்மானித்தார். தனது மனைவி பெயரில் இருந்த ஒரு சிறிய நிலத்தை விற்பனை செய்து அதிலிருந்து கிடைத்த தொகையைக் கொண்டு மும்பை சென்று பல் மருத்துவம் பயின்றார். அடுத்த முப்பது ஆண்டுகளில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பல் மருத்துவராகப் பணிபுரிந்தார். மதுரை, காரைக்குடி, புதுக்கோட்டை உள்ளிட்ட ஊர்களில் பல் மருத்துவ சிகிச்சை அளித்து வந்த அவர் பொருளாதார ரீதியாக தன்னை மேம்படுத்திக் கொண்டார். புதுக்கோட்டையில் பல் மருத்துவராக இருந்தபோது, அதே ஊரைச் சேர்ந்தவரும், அப்போதைய தமிழ்த் திரைப்படவுலகில் சூப்பர் ஸ்டாராக விளங்கியவருமான பியூசின்னப்பா, டேனியலிடம் சிகிச்சைக்கு வந்தபோது இருவருக்குமிடையே நட்பு மலர்ந்தது. இந்த நட்பே அவரை வாழ்வில் அடுத்த கட்ட வீழ்ச்சிக்கு வழிவகுத்தது, பியூசின்னப்பாவுடன் இணைந்து தமிழ்த் திரைப்படம் ஒன்றைத் தயாரிக்கும் பணியில் இறங்கிய டேனியலுக்கு அதுவே பேரிடியாக அமைந்தது.

அந்தத் திரைப்படத் தயாரிப்புப் பணிகள் பாதியிலேயே நின்றதால் மருத்துவ தொழிலில் சம்பாதித்த அனைத்தையும் இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார். இந்தத் தோல்வி அவரை மனதளவில் மிகவும் பாதித் தலையடுத்து உடல்நலம் குன்றிய நிலையில், அகஸ்தீஸ்வரத்தில் உள்ள குடும்ப பூர்வீக வீட்டில் முதுமைக் காலத்தைக் கழித்தார். அவரது பிள்ளைகளும் பிழைப்புத்தேடி வெளியூர்களுக்குச் சென்றுவிட்ட நிலையில் பொருளாதார உதவியின்றித் தவித்த டேனியல், கேரள அசரால் நலிவடைந்த கலைஞர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத்திற்காக விண்ணப்பித்தார். அதேபோன்று தனது திரைப்பட முயற்சிகளைக் கருத்தில் கொண்டு நிதியுதவி அளிக்குமாறு மத்திய அரசுக்கும் கோரிக்கை விடுத்தார். நலிவடைந்த கலைஞர்களுக்கான ஓய்வூதியம் வழங்குவதற்காக தகுதியுள்ள பயனாளிகளைத் தேர்வு செய்ய கேரள அரசு நியமித்த ஆய்வுக் கமிட்டி டேனியலின் விண்ணப்பத்தை நிராகரித்தது. இந்த கமிட்டியில் இடம்பெற்றிருந்த பெரும்பாலான உறுப்பினர்கள், டேனியல் ஒரு மலையாளி அல்ல என்றும், ஒரு ஒலியற்ற சினிமாவை மலையாள மொழித் திரைப்படமாகக் கருதமுடியாது என்றும் கூறி டேனியலுக்கு ஓய்வூதியம் வழங்க ஆட்சேபணை தெரிவித்ததால் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

அவரது வாழ்வின் கடைசி எட்டு ஆண்டுகள் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு, கண்பார்வை இழந்ததால் வேதனையுடன் கழிந்தது. அவர் இறப்பதற்கு சில நாட்கள் முன்பு மத்திய அரசிடமிருந்து ஆயிரம் ரூபாய் நிதியுதவிக்கான அறிவிப்பு வெளிவந்தது. இந்தத் தகவலை டேனியலிடம் அவரது மனைவி தெரிவித்த போது அவர் எதுவும் பேசமுடியாத நிலையில் இருந்தார். அவரின் கண்களிலிருந்து கண்ணீர் மட்டும் வழிந்தது. 1975ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் நாள் அவரது உயிர் பிரிந்தது. சீர் திருத்த கிறிஸ்தவப்பிரிவைச் சேர்ந்தவர்கள் சினிமா போன்ற பொழுது போக்கு அம்சங்கள் மீது கடுமையான பார்வையைக் கொண்டிருந்ததால் டேனியல் அவரது சுற்றத்தாரால் விலக்கப்பட்ட நபராகவே கருதப்பட்டு

வந்தார். டேனியல் தனது வாழ்நாளின்போது உரிய அங்கீகாரத்தைப் பெறமுடியாமல் போனதற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

விகதகுமாரன் ஒரு தோல்விப்படமாக இருந்தாலும் கேரளாவில் அடுத்த திரைப்படம் உருவாவதற்கு அது அடிகோலியது. டேனியலின் திரைப்பட முயற்சிகள் அவரது உறவினரும் செல்வந்தருமான சுந்தர் ராஜ் என்பவருக்கு திரைப்படம் தயாரிக்கும் ஆர்வத்தைத் தோற்றுவித்தது. 1933 ஆம் ஆண்டு சுந்தர் ராஜின் தயாரிப்பில் வெளிவந்த "மார்த்தாண்ட வர்மா" திரைப்படம் மலையாள மொழியில் வெளிவந்த இரண்டாவது திரைப்படமாகும். நாகர் கோவிலைச் சேர்ந்த சுந்தரர் ராஜ் அரசாங்கத்தின் கட்டுமானப் பணிகளில் ஒப்பந்ததாரராக இருந்தவர் என்று கூறப்படுகிறது. விகதகுமாரனின் சமூகக் கதைக்களம் பார்வையாளர்களை அதிகம் கவராததால் கேரள வரலாற்றில் வலிமையான மன்னராகக் கருதப்படும் மார்த்தாண்ட வர்மாவின் வரலாற்றை திரைப்படமாக்க சுந்தர் ராஜ் முடிவு செய்தார். சென்னையில் முதல் முழு நேரத் திரையரங்கமான "கெய்ட்டி"-ஐ நிறுவிய வெங்கையாவின் மகனும், சென்னையில் திரைப்படங்களைத் தயாரித்து வந்தவருமான பிரகாஷ் என்பவரை சுந்தர் ராஜ் தனது திரைப்படத் தயாரிப்பிற்காக அணுகினார். பிரகாஷிடம் சினிமாப் பயிற்சிப் பெற்ற பி.வி.ராவ் மார்த்தாண்ட வர்மா படத்தை இயக்கவும், திரைக்கதையை எழுதுவது எனவும் முடிவு செய்யப்பட்டது. 1891 ஆம் ஆண்டு கமலா புக்ஸ் பதிப்பகத்திரால் வெளியிடப்பட்ட எழுத்தாளர் சி.வி. ராமன் பிள்ளை எழுதிய "மார்த்தாண்ட வர்மா" நவலைத் தழுவி இந்தப் படத்திற்கான திரைக்கதை வடிவமைக்கப்பட்டது.

வேணாட்டின் மன்னரான ராஜாராம வர்மாவின் சகோதரியின் மகனான மார்த்தாண்ட வர்மாவுக்கு மருமக்கள் வழி வாரிசுரிமைப்படி அடுத்த மன்னனாக முடி சூட்டப்படுகிறது. ராமவர்மாவின் மனைவிகளுள் ஒருவரான தமிழ்ப் பெண் அபிராமிக்குப் பிறந்த சகோதரர்கள், வாரிசுரிமைப் படி தங்களுக்கே முடிசூட்ட வேண்டும் என்று வலியுறுத்தி கலகத்தில் இறங்கியதால் உள்நாட்டுப் போர் மூண்டது இறுதியில் சகோதரர்களை வெற்றி கொண்ட "மார்த்தாண்டவர்மா" பல்வேறு குறுநில மன்னர்களைத் தோற்கடித்து கொச்சி வரை தனது சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்தி திருவிதாங்கூர் சமஸ்தானத்தை நிறுவினார். 1741 ஆம் ஆண்டு குளச்சலில் நடைபெற்ற போரில் திருவிதாங்கூர் படைகள் டச்சுப் படைகளைத் தோற்கடித்தன. 1750 ஆம் ஆண்டு திருவனந்தபுரத்தில் கோயில் கொண்டிருக்கும் பத்மநாப சுவாமிக்கு தனது ஆட்சியை அர்ப்பணிப்பதாக மார்த்தாண்ட வர்மா பிரகடனப் படுத்தினார்.

இந்தப் படத்தில் மார்த்தாண்ட வர்மாவாக ஜெயதேவும் பத்மநாபன் தம்பியாக நாயக் என்பவரும் நடித்தனர். 118 நிமிடங்கள் ஓடக்கூடிய இந்தப் படத்தின் தயாரிப்புப் பணிகள் அனைத்தும் சென்னையிலேயே நடைபெற்றன. இந்தப் படம் திரைக்கு வந்த இரண்டே நாளில் தயாரிப்பாளர் படச்சுருளை திரும்பப்பெற வேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்பட்டார். "மார்த்தாண்ட வர்மா" நாவலின்

கதையை தங்களது அனுமதியின்றித் திரைப்படமாக எடுத்துவிட்டதாக கமலா புக்ஸ் பதிப்பகத்தினர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து படத்தைத் திரையிடுவதற்கான தடை உத்தரவைப் பெற்றனர். இந்தப் படத்தோடு மலையாள மொழியில் ஒலியற்ற திரைப்படங்களின் வரலாறு முடிவுக்கு வந்தது. இவ்வாறு 40 வருடங்களாக பெட்டிக்குள் முடங்கிக் கிடந்த "மார்த்தாண்ட வர்மா" படத்தின் படச்சுருள். 1974ம் ஆண்டு National Film Archive of India நிறுவனத்தினரின் முயற்சியால் மீண்டும் திரையிடப் பட்டது. இந்த நிறுவனத்தின் இயக்குனராக இருந்த பி.கே. நாயரின் பெரும் முயற்சியால், கமலா புக்ஸ் பத்திப்பகத்தினரிடம் இருந்து கதைக்கான அனுமதியைப் பெற்று "மார்த்தாண்ட வர்மா" மீண்டும் திரைக்கு வந்தது. இந்தப் படத்தை பார்த்த விமர்சகர்கள் இதனை ஒரு சிறந்த தேசபக்தியை வலியுறுத்தும் படமாகக் கருதுகின்றனர். தென் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட ஒலியற்ற திரைப்படங்களின் படச்சுருள்கள் அனைத்தும் பத்திரப்படுத்தப்படாமல் அழிந்து போய்விட்ட நிலையில் "மார்த்தாண்ட வர்மா" படச்சுருள் மட்டுமே இன்றும் பத்திரப்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

மார்த்தாண்ட வர்மா திரைப்படமும் தோல்வியைச் சந்தித்தால் மலையாளத்தில் அடுத்த திரைப்படம் உருவாவதற்கு 5 ஆண்டுகள் ஆனது. இக்காலகட்டத்தில் இந்தியாவில் ஒலிப்பதிவுடன் கூடிய பேசும் படங்கள் அறிமுகமாகத் தொடங்கின. 1931ஆம் ஆண்டு மும்பையில் நாட்டின் முதல் பேசும் படமான ஆலம் ஆரா வெளியானது. அதே ஆண்டில் சென்னையில் தமிழின் முதல் பேசும் படமான காளிதாஸ் வெளியானது. தமிழகத்தின் பிரபல திரைப்படத் தயாரிப்பாளரான சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் அதிபர் டி.ஆர். சுந்தரத்திற்கு மலையாள மொழியில் திரைப்படம் எடுக்கும் ஆர்வம் ஏற்பட்டதை அடுத்து, அவரது தயாரிப்பில் மலையாளத்தின் முதல் பேசும் படமான "பாலன்" 1938 ஆம் ஆண்டு திரைக்கு வந்தது.

ஷேவக்ராம் தேக்சந்த் நோட்டாளி என்பவரால் இயக்கப்பட்ட இந்தப் படத்தில் எம்.கே.கமலம், மதனகோபால், கே.கே.ஆரூர் போன்றவர்கள் நடித்திருந்தனர். எ. சுந்தரம் என்பவர் எழுதிய கதைக்கு பிரபல மலையாள எழுத்தாளர் முதுகுளம் ராகவன் பிள்ளை திரைக்கதையையும், பாடல்களையும் எழுதினார். இந்தப் படத்தில் இடம் பெற்றிருந்த 23 பாடல்களும் தமிழ் மற்றும் இந்திப் பாடல்களின் மெட்டுகளில் அமைக்கப்பட்டிருந்தன. மீனாட்சி என்ற சிற்றன்னையினால் வீட்டை விட்டுத் துரத்தப் பட்ட பாலன் என்ற சிறுவனும், அவனது சகோதரி சரசாவும் பாரிஸ்டர் மேனன் என்ற தேயிலைத் தோட்ட முதலாளியிடம் தஞ்சம் அடைகின்றனர். பாலனின் பூர்வீகச் சொத்துகளை மீட்க சட்ட ரீதியான உதவிகளை மேனன் செய்துவருகிறார். இதனால் ஆத்திரம் அடைந்த மீனாட்சி அந்த வழக்கின் தீர்ப்பு நாளன்று மேனனை துப்பாக்கியால் சுடும் போது தோட்டா பாலன் மீது பாய்ந்து அவன் இறந்து போய்விடுகிறான்.

இன்று இந்தப் படத்தின் படச் சுருளோ, பாடல்களோ நமக்குக் கிடைக்கவில்லை. "Good Luck to Every body" என்ற தலைப்பில் ஆர்.

கோபாலகிருஷ்ணனால் எழுதப்பட்ட மலையாளப் புத்தகம் இந்தப் படத்தைப் பற்றி முழுமையான தகவல்களை அளிக்கிறது. Good Luck to Every body என்பது பாலன் படத்திற்காகப் பதிவு செய்யப்பட்ட முதல் வசனமாகும். பாலன் படத்தில் நடித்தவர்களின் பேட்டிகள், திரைக்கதை, பாடல் வரிகள், இயக்குநர் நோட்டாளியின் மகள் எழுதியுள்ள கட்டுரை, மற்றும் இந்தப் படத்தைப் பற்றிய அரிய புகைப்படங்களுடன் இந்தப் புத்தகம் வெளிவந்ததுள்ளது.

"பாலன்'' கேரளாவில் ஒரு மிகப் பெரிய வெற்றிப்படமாக அமைந்த தால் பல தமிழ்த் தயாரிப்பாளர்களும் மலையாள மொழியில் திரைப்படம் தயாரிக்கும் பணியில் இறங்கினர். 1947ஆம் ஆண்டு வரை தமிழ்த் தயாரிப்பாளர்களே மலையாளத் திரைப் படங்களைத் தயாரித்து வந்தனர்.

குஞ்சர்க்கோ என்பவர் ஆலப்புழையில் 1947ஆம் ஆண்டு உதயா ஸ்டுடியோவை ஸ்தாபித்த பிறகே மலையாளிகள் சினிமா தயாரிப்பில் இறங்கினர். இவ்வாறு படிப்படியாக வளர்ச்சி அடையத் தொடங்கி மலையாள சினிமா கேரள மக்களால் நன்கு ரசிக்கப்படும் கலை வடிவமாக மாறியது. இலக்கியத் தாக்கத்திற்கு உட்பட ஆரம்பித்த மலையாள சினிமா யதார்த்த வாழ்வியலை பிரதிபலிக்கத் தொடங்கியதன் மூலம் சர்வதேச திரைப்பட அரங்கிலும் முத்திரைபதித்தது.

தனது முதுமை காலத்தின் டேனியல் மலையாள சினிமா பத்திரிகையான "நானா'' இதழில் ஆசிரியர் குமாரசுவாமிக்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு குறிப்பிடுகிறார். "இன்று மலையாள சினிமா மிகவும் வளர்ச்சியடைந்துவிட்ட ஒரு துறையாக உள்ளது. அந்தக் காலத்தில் சினிமாவுக்கான தயாரிப்புப் பணிகள் அனைத்தையும் ஒருவரே செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருந்த என்னைப் போன்றவர்களை எவரும் அங்கீகரித்ததில்லை. புதிய தலைமுறையினருக்கு என்னைப் பற்றி எதுவும் தெரியப் போவதில்லை. அது அவர்களுடைய தவறு அல்ல என்னை நானே சாந்தப்படுத்திக் கொள்கிறேன்.''

மலையாளத் திரைப்பட வரலாற்றில் 1990கள் வரை டேனியல் கண்டு கொள்ளப்படாதவராகவே இருந்தார். மலையாள சினிமாவில் வரலாற்றை எழுதியவர்கள் "பாலன்'' படத்தையே முதல் படமாகக் குறிப்பிட்டு வந்தனர். டேனியலின் படைப்பாற்றலையும், கலை ஆர்வத்தையும் புரிந்து கொண்ட சில பத்திரிக்கையாளர்கள் தொடர்ந்து அவரைப் பற்றிய செய்திகளைப் பிரசுரித்து வந்ததன் மூலம், டேனியலுக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்பட்ட வேண்டும் என்று திரைப்பட ஆர்வலர்கள் கேரள அரசை வலியுறுத்தி வந்தனர்.

இவர்களது முயற்சியின் விளைவாக 1991ஆம் ஆண்டு டேனியலை "மலையாள சினிமாவின் தந்தை'' என்று கேரள அரசு அங்கீகரித்தது அத்துடன் கேரள அரசால் வழங்கப்பட்டு வரும் திரைப்பட விருதுகளில் உயரிய விருதான மலையாள சினிமாவின் வாழ்நாள் சாதனையாளர் விருதுக்கு டேனியலின் பெயரைச் சூட்டுவதாகவும் கேரள அரசு

அறிவித்தது. 1992ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வரும் ஜே.சி. டேனியல் விருதினைப் பெற்றவர்களில் பாடகர் கே.ஜே.ஜேசுதாஸ், நடிகர் மது போன்றவர்கள் முக்கியமானவர்கள்.

2001ஆம் ஆண்டு ஜே.சி. டேனியல் நூற்றாண்டு விழா திருவனந்தபுரத்தில் கேரள திரைப்பட ஆர்வலர்களால் வெகு விமரிசையாகக் கொண்டடப்பட்டது. இந்த விழா கமிட்டியினர் டேனியலைப் பற்றி ஒரு புத்தகம் ஒன்றை வெளியிட முடிவு செய்து. பேராசிரியர் டார்வின் என்பவரிடம் பொறுப்பை ஒப்படைத்தனர். டார்வினால் எழுதப்பட்ட "மலையாள சினிமாவின்றெ பிதாவு'' டேனியலின் வாழ்க்கையை அறிந்து கொள்ள உதவும் முக்கிய நூலாகும். 2002 ஆம் ஆண்டு திரைப்படத் தயாரிப்பாளர் கவுடியார் தாஸ் விகதகுமாரனை ரீமேக் செய்தார். வசனங்களுடன் கூடிய வண்ணப்படமாக இது அமைந்திருந்தது.

"Good Luck to Every body'' நூலை எழுதிய ஆர். கோபால கிருஷ்ணன் டேனியலைப் பற்றி எடுத்த "The Lost Life" என்ற ஆவணப்படம் ஒரு முக்கியமான பதிவாகும்.

அகஸ்தீஸ்வரத்தில் அமைந்துள்ள டேனியலின் கல்லறையைத் தேடிப் பயணிப்பதாக துவங்கும் இந்த ஆவணப்படத்தில் டேனியலின் குடும்பத்தாரின் பேட்டி, அவரது திரைப்படத் தயாரிப்பு குறித்த ஆவணங்கள், அவரது முதுமைக் காலம் குறித்த சித்தரிப்பு என்று பல அம்சங்கள் இடம் பெற்றுள்ளன. விகதகுமாரன் திரைப்படம் 1928ஆம் ஆண்டு வெளியிடப்பட்டதாக பரவலாகக் கூறப்பட்டு வந்த நிலையில் 1930 ஆம் ஆண்டு அக்டோபர் 23 ஆம் தேதி முதல் திரையிடப்பட உள்ளதாக டேனியல் வெளியிட்ட விளம்பரம் ஒன்றை கோபாலகிருஷ்ணன் பதிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். சிறு வயதில் இந்தப் படத்தின் முக்கியத்துவத்தை உணராமல் படச் சுருள்களைத் தீ வைத்துக் கொளுத்தியதாக டேனியலின் மகன் ஹாரிஸ் டேனியல் இந்த ஆவணப்படத்தில் கூறியுள்ளார். இவ்வாறு டேனியல் பதிவு செய்த 2 திரைப்படங்களின் படச்சுருள்களும் இன்று நமக்குக் கிடைக்காமல் போய்விட்டன.

தற்காப்புக் கலைகள் டேனியலுக்கு இருந்த மீது பற்றுதலே அவரை திரைப்படம் எனும் துறைக்குத் தள்ளியது. அகஸ்தீஸ்வரம் கிராமத்தில் பிறந்த ஒருவர்தான் மலையாள சினிமாவின் தந்தை எனும் உண்மை தற்போது தான் கேரளாவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நிச்சயமாக டேனியல் ஒரு மாபெரும் சாகச குணங்கள் பொருந்திய படைப்பாளி என்பதில் எந்த ஐயமும் இல்லை. தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர் என்ற ஒரே காரணத்திற்காக டேனியலைப் புறக்கணித்த கேரள அரசு, அவர் மறைந்த பிற்காவது அவரது படைப்பாளுமையைப் புரிந்து கொண்டு அவரது பெயரில் உயரிய திரைப்பட விருதை அறிவித்திருப்பது பாராட்டத்தக்காகும்.

ஒரு கல்லூரி நிறுவனரின் நினைவுக் குறிப்புகள்

திரு. எஸ்.டி. பாண்டியனார் அவர்களின் நினைவுக் குறிப்புகளை வெளியிட வேண்டும் என்று நண்பர்கள் வற்புறுத்தியதால் அவர் எழுதியவற்றில் ஒரு சில தனிநபர் சார்ந்த விமர்சனங்களை நீக்கி அப்படியே வெளியிட்டுள்ளோம். அகஸ்தீஸ்வரம் ஊர் வரலாற்றை எழுதும் போது திரு. எஸ்.டி. பாண்டியனார் அவர்களையும் திரு. ஜி.ஏ. மார்த்தாண்டன் அவர்களையும் குறிப்பிடாமல் இருக்க சாத்தியம் இல்லை. எஸ்.டி. பாண்டியனார் தனது குறிப்புகளில் விவேகானந்தா கல்லூரி உருவான போது அக்கல்லூரிக்கு பல இலட்ச மதிப்புள்ள விஞ்ஞான கருவிகளை கடனாக கொடுத்த திரு. ஜெகநாத்ஸன், புத்தகங்களை கொடுத்த திரு. டேவிட்சன், வங்கி கடன் கொடுத்த ஐ.ஓ.பி. மேலாளர் திரு. ஜான் திரு. யோவான் ஆகிய கிறிஸ்துவ நண்பர்களை நன்றியோடு குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு பல, ஒத்த கருத்துள்ள தன்னலம் கருதாத பெரியோர்களின் கூட்டு முயற்சியால் தான் அகஸ்தீஸ்வரம் விவேகானந்தா கல்லூரி உருவானது. பிற்பட்ட சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்காக உருவாக்கப்பட்ட அக்கல்லூரி பலருடைய கல்வி வளர்ச்சியிலும் வேலைவாய்ப்பிலும் பங்காற்றி யுள்ளது என்பதை யாராலும் மறுக்க முடியாது. திரு. எஸ்.டி. பாண்டியனார் தனது பதவியையோ அல்லது செல்வாக்கையோ எந்த ஒரு சுயநலத்திற்காகவும் பயன்படுத்தவில்லை என்பதை பலர் என்னிடம் குறிப்பிட்டுள்ளனர். அன்னாரது இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள வந்த பேராசிரியர் சுரேந்திரன் அவர்கள் என்னிடம் பேசிக் கொண்டிருந்த போது திரு. எஸ்.டி. பாண்டியனார் தனது மிக நெருங்கிய உறவினர்களுக்கு கூட வேலைவாய்ப்பிலோ அல்லது தேர்வுகளிலோ எந்தவிதமான சிபாரிசும் செய்ததில்லை என்பதை குறிப்பிட்டார். ஆங்கிலம், தமிழ் மற்றும் மலையாளம் ஆகிய மூன்று மொழிகளிலும் பேச, எழுத மற்றும் படிக்க மிக நன்றாக தெரிந்த திரு.எஸ்.டி. பாண்டியனார் தனது வாழ்நாளில் "மெய்ஞானமும் விஞ்ஞானமும்" என்ற ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார். தன்னுடைய சாதிப் பெயரை அவர் இறுதிக் காலங்களில் உபயோகிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவரது அனுபவங்களில் ஒரு சிலவற்றை சுயசரிதையாக எழுதி வைத்திருந்தார். அவற்றை வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

தி. லஜபதி ராய்

வழக்கறிஞர்

வைகை சட்ட நிறுவனம்

"டால்ஸ்டாய் வில்லா"

593, கே.கே.நகர், மதுரை-20.

இடம் : மதுரை

தேதி : 10-08-2006

எஸ்.டி. பாண்டியனாரின் - சுயசரிதைக் குறிப்புகள்

1899-1997

இந்நூலைப் படிக்கின்ற நேயர்களுக்கு நான் என்னை அறிமுகப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். இப்பணியை வேறொரு வருக்கு விடாமல் நானே மேற்கொண்டுள்ளதால், தற்புகழ்ச்சி என்ற குற்றத்துக்கு நான் ஆளாக நேரிடலாம். என்னை அறியாதார் சிறிதேனும் என்னை அறிந்திடவும், புறங்கூறித் திரிவோரின் பொய்யுரைகளை மறுத்திடவும் கருதி, சில உண்மைகளை இக்கட்டுரையிற் குறிப்பிட்டுள் ளேன். எனது புகழுக்காக எதையும் நான் கூறவில்லை. அங்ஙனம் ஏதாவது கூறியுள்ளதாக தோன்றுமாயின், "தன்னை மறுதலை பழித்தகாலை, தன்னைப் புகழ்தலும் தகும்'' என்ற நன்னூல் நெறியை நினைத்து மன்னிக்கவும்.

கொல்லம் 1075 ஐப்பசி 21ம் தேதி (05-11-1899) ஞாயிற்றுக்கிழமை என்னுடைய பிறந்த நாள். ஞாயிறன்று பிறந்தவர் ஞாயிறுபோல் பிரகாசிப்பதில்லை. இவ்விதிக்கு நானும் விலக்கல்ல. என்னுடைய ஜாதகத்தை கணித்த சோதிடர் தவறிவிட்டாரோ என்று எண்ணுகிறேன். நான் பிறந்த சமயத்தில் (இரவு பதினொன்றரை நாழிகை) சுக்கிரன், சந்திரன், செவ்வாய், புதன், சனி ஆகிய ஐந்து கிரகங்களும் ஆறாமிடத்தில் குழமியிருந்ததை ஆய்வு செய்த சோதிடர், நான் ஒரு அதிசய புருஷனாய் திகழ்வேன் என்று கூறியுள்ளார். இக்கூற்று பொய்த்துவிட்டது. இறைவனருளால் நான் இன்றுவரை ஒரு சாதாரண இந்தியக் குடிமகனாய்த்தான் இருந்து கொண்டிருக்கின்றேன். சோதிடருடைய ஆயுட்கணக்கையும் தாண்டி வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். இப்போது எண்பத்தெட்டு வயது பூர்த்தியாகிவிட்டது.

அகஸ்தீஸ்வரம் ஊரில் பிறந்த நான் இங்குள்ள திண்ணைப் பள்ளிக்கூடத்தில் முதலில் மணலிலும் பின்னர் பனையோலையிலும் எழுதி படித்துக் கொண்டிருந்தேன். 1909 மே மாதம் நான் நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ உயர்நிலைப் பள்ளியைச் சார்ந்த ஆரம்ப பாடசாலையில் மூன்றாம் வகுப்பில் சேர்க்கப்பட்டேன். அப்பள்ளிகளிலும் அதோடு இணைந்த நடுநிலை, உயர்நிலை, பள்ளிகளிலும், கல்லூரியிலும் ஒவ்வொரு வகுப்பில் தவறாது கற்றுத் தேர்ந்து 1919-20 இண்டர்மீடியட் பரீட்சையிலும் தேறிவிட்டேன். அப்போது ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரியில் பி.ஏ. வகுப்பு இல்லை. ஆகவே, திருவனந்தபுரம் மஹாராஜா கல்லூரியில் பி.ஏ., வகுப்பில் சேர்ந்தேன். அன்று அக்கல்லூரியும் மற்றும் தென்னிந்திய கல்லூரிகள் அனைத்தும் சென்னை பல்கலைக்கழகத்திற்கு உட்பட்டவைகளாய் இருந்தன. 1922ல் பி.ஏ. பரீட்சையில் பாஸ்பண்ணி, பட்டம் பெறாது இருக்கையில் அரசாங்க வேலைக்காக யாரும் அறியாமல் ஐந்து காசு (1 ரூபாய் = 456 திருவிதாங்கூர் காசு) அஞ்சல் செலவில் அனுப்பிய சில விண்ணப்பங்களில் ஒன்று அன்றைய திருவிதாங்கூர் திவான் இராகவையா

அவர்களுக்கும் அனுப்பியிருந்தேன். திவானுடைய தயவினால் உடனே திருவனந்தபுரம் அரசாங்க தலைமைக் காரியாலயத்தில் மாதம் ரூ. 25 சம்பளத்தில் ஒரு குமாஸ்தா வேலையில் நியமனம் பெற்றேன்.

அன்றைய ரூ. 25/- இன்றைய ரூ. 800/- க்கும் மிஞ்சிய மதிப்புள்ளது. 1923 ஜனவரி 19ம் தேதி அவ்வேலையில் புகுந்தேன். வேலையில் இருக்கையில் B.A., பட்டம் பெற்றேன். பட்டம் பெற்றபின் 1927ல் திருவனந்தபுரம் சட்டக்கல்லூரியில் சேர்ந்து F.L., B.L., வகுப்புகளில் படித்து பாஸ் பண்ணி பல்கலைக்கழக பரீட்சைக்கு தேர்வு செய்யப்பட்டேன். ஆனால், என்னுடைய குமாஸ்தா வேலையும் இல்வாழ்க்கையும் இடைஞ்சலாய் இருந்தமையால், பல்கலைக்கழக பரீட்சை எழுதாது விட்டுவிட நேர்ந்தது எனினும் சென்னை அரசாங்க கிரிமினல் சட்டப் பரீட்சை எழுதி தேறிவிட்டேன். பின்னர் தலைமைக் காரியாலயத்தில் கண்காணிப் பாளராகவும், பூதப்பாண்டி, நாகர்கோவில், குழித்துறை, புனலூர், செங்கோட்டை முதலிய பலவிடங்களில் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாகவும் தாசில்தாராகவும் பணியாற்றி, இறுதியில் திருவிதாங்கூர் கொச்சி அரசாங்க உதவி காரியதரிசியாப் பதவி வசித்து, ஆக முப்பது வருட பழுதற்ற சேவை செய்தபின் ஓய்வு பெற்றேன். என்னுடைய S.S.L.C. சான்றிதழில் எனது பிறந்த நாள் 1897 டிசம்பர் 20 என்று பிழையாக பதிவாகி இருந்தமையால், 1952 டிசம்பர் 20ம் தேதி எனக்கு 55 வயது பூர்த்தியாகிவிட்டது என்ற தப்புக்கணக்கில் அன்றையதினம் அரசாங்க ஊழியத்திலிருந்து ஓய்வு பெற்று மகிழ்ச்சியடைந்தேன். உண்மையில் அன்று எனக்கு 53 வயது நிரம்பிய 45 நாட்கள்தான் கழிந்திருந்தன.

அன்று அரசாங்க வேலையிலிருந்து விடுதலை கிடைத்ததேயொழிய உண்மையில் ஓய்வு கிடைக்கவில்லை. அந்த விடுதலையைத் தொடர்ந்து, அகஸ்தீஸ்வரத்தில் காதி போர்டின் நிதி உதவியோடு ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழில் கூட்டுறவு சங்கத்தின் முதலாவது கௌரவ தலைவராகவும், 10-09-1953 முதல் இரு வருடங்கள் திருவனந்தபுரம் மாவட்ட மேம்பாட்டுக் குழு கௌரவ அங்கத்தினராகவும், 27-09-1954 முதல் எட்டு வருடங்கள் நாகர்கோவில் முதல் வகுப்பு பெஞ்ச் மாஜிஸ்திரேட் கோர்டதியின் கௌரவ அக்கிராசனாராகவும், நாகர்கோவில் வில்லேஜ் பஞ்சாயத்து கோர்ட்டின் கன்னியாகுமரி நகரிய ஆரம்ப நிர்வாக குழுவின் ஒரு கௌரவ அங்கத்தினராகவும் பணிபுரிந்தேன். தன்னலம் கருதாது பொது நலச் சேவையில் ஈடுபட்டிருந்த இக்கால கட்டத்தில் நான் நாகர்கோவிலிலும் அகஸ்தீஸ்வரத்திலும் வசித்து வந்தேன்.

1952ல் நான் அரசாங்க வேலையினின்று விடுதலை பெற்று, நான் பிறந்து வளர்ந்த அகஸ்தீஸ்வரம் ஊருக்கு வந்த போது இங்கே ஐந்து வகுப்புகள் உள்ள ஒரு அரசாங்க ஆரம்ப பாடசாலையும், குலசேகர விநாயகர் ட்ரஸ்ட்டில் உட்பட்ட கோவில்களும், தவிர வேறெந்த பொது ஸ்தாபனமும் இல்லாதிருந்தது. இப்போது இங்கே காணப்படுகின்ற

பஞ்சாயத்து ஆபீஸ், பாலர்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி, மெர்கன்டைல் பாங்க், கல்லூரி, மாணவிகள் விடுதி, ஆரம்ப சுகாதார நிலையம், ஆஸ்பத்திரி, தபால் ஆபீஸ், தந்தி ஆபீஸ், வில்லேஜ் ஆபீஸ், சோப் யூனிட், காதி நிலையம், தண்ணீர்தொட்டி, ரயில்வே ஸ்டேஷன், பஸ் போக்குவரத்து வசதிகள் - எல்லாமே 1952க்கு பின் வந்தவைகளே. உற்றுநோக்கிடில் ஒரு ஸ்தாபனம் வேறொரு ஸ்தாபனம் தோன்றவும் வளரவும் காரணமாயிருந்திருப்பது புலப்படும். இவற்றுள் பலவற்றை இவ்வூரில் அமைத்திட என்னால் இயன்றதெல்லாம் செய்து வெற்றி பெற்றுள்ளேன் என்ற உண்மையினை கூறிக் கொள்ளுகிறேன். அதற்காக எவரும் என்னை புகழவோ, பாராட்டவோ தேவையில்லை, புகழையோ, நன்றியையோ, வேறு பிரதிபலனையோ எதிர்பார்த்து நான் எதையும் செய்ததில்லை என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

1952க்கு பின் இவ்வூரில் தோன்றிய முதலாவது ஸ்தாபனம் வில்லேஜ் பஞ்சாயத்து ஆகும். இது என்று ஆரம்பமாயிற்று என்பது இன்றைய தலைமுறையினருக்கு தெரியாதிருக்கலாம். தெற்குச்சாலை சர்ச்சுக்கு எதிரேயுள்ள C.S.I. மிஷனுக்கு சொந்தமான ஓலைக்கூரை கட்டிடத்தை வாடகைக்கு அமர்த்தி, அதில்தான் பஞ்சாயத்து ஆபீஸ் ஆரம்பிக்கப்பட்டது. 1953 ஆகஸ்ட் 15ம் நாளன்று நான்தான் அதை ஆரம்பித்து வைத்தேன். இந்த ஆரம்ப வைபவம் பஞ்சாயத்தின் முதலாவது நிகழ்ச்சியாக பஞ்சாயத்து நடவடிக்கை புத்தகத்தில் அன்றைய தினம் பதிவு செய்யப்பட்டுள்ளதைக் காணலாம்.

1953ல் திரு.ஜி.ஏ. மார்த்தாண்டன் முதல்பேர் குலசேகர விநாயகர் கோவில் டிரஸ்டிகளாயிருந்தனர். அவர்கள் இவ்வூர் அரசாங்க பிரைமரி பாடசாலையை நடுநிலைப்பள்ளியாக உயர்த்திட முயன்றபோது நான் என்னால் அனைத்தும் செய்தேன். அவர்களுடைய மனு கீழ்மட்ட கல்வி அதிகாரிகளால் பரிந்துரைக்கப்பட்டு திருவனந்தபுரம் கல்வி இயக்குநர் ஆபீஸில் முடங்கிக் கிடந்தது. எனவே, திருவனந்தபுரம் சென்று கல்வி இயக்குநர் திரு. வி. சுந்தரராஜ் நாயுடு அவர்களை கண்டுபேசினேன். அன்னாரின் பிரதிகூல நிலையை அறிந்தேன். உடனே எனது சகோதர் அட்வகேட் திரு. S.I. பாண்டியனார் அவர்களுடைய தலைமையில் ஒரு பொதுஜன பிரதிநிதி குழுவை திருவனந்தபுரத்துக்கு அழைத்துப்போய் அப்போதைய முதன்மந்திரி திரு. A.J. ஜான் அவர்களை கண்டுபேசி ஒரு மனுவை சமர்ப்பித்தேன். அம்மனு கல்வி இயக்குநர் அவர்களுடைய கவனத்துக்கு அனுப்பப்படவே, அவர் தமது நிலையை மாற்றி, அகஸ்தீஸ்வரம் ஆரம்ப பள்ளியை நடுநிலைப்பள்ளியாய் உயர்த்திட அரசாங்கத்துக்கு பரிந்துரை செய்தார். ஆனால், அரசாங்கம் இவ்விஷயத்தை பரிசீலனைக்கு எடுப்பதற்கு முன் சில தடங்கல்கள் ஏற்பட்டன. அவ்வருடம் (1954) திருவிதாங்கூர் கொச்சி மாநிலத்தில் எவ்விடத்திலும் புதிய நடுநிலைப்பள்ளி திறக்க தேவையில்லை என்று அரசாங்கம் முடிவு செய்துவிட்டது. இது ஒரு பெரிய தடங்கலாயிற்று, நல்லகாலமாக திரு A.J. ஜான் மந்திரிசபை கலைக்கப்பட்டுவிட்டது.

சில நாட்களில் புதியதோர் மந்திரிசபை உருவாயிற்று. சட்டசபை தேர்தலில் (P.S.P.) பிரஜா சோஷியலிஸ்ட் கட்சியில் ஏற்கனவே வெற்றி பெற்றிருந்தவரும், எனது சகோதரர் திரு. S.I. பாண்டியனாரோடு முன்னர் காங்கிரஸ் கட்சியில் இருந்த வருமாகிய திரு. பட்டம் தாணுபிள்ளை அவர்களின் தலைமையில் ஒரு புது மந்திரிசபை பதவி ஏற்றது. சட்டசபை தேர்தலின் போது எனக்கும் திரு. பட்டம் தாணுபிள்ளை அவர்களோடு தொடர்பு ஏற்பட்டிருந்தது. குமரி மவாட்டத்தில் நானும் P.S.P. கட்சியின் ஆதரவு பெற்ற சுதந்திர வேட்பாளராக அகஸ்தீஸ்வரம் தொகுதியில் போட்டியிட்டேன். எனது நண்பர் திரு. T.S. இராமசாமி பிள்ளை அவர்களும் P.S.P. கட்சி வேட்பாளராக தோவாளை தொகுதியில் போட்டியிட்டார். நான் தோல்வியுற்றேன். நண்பர் இராமசாமி பிள்ளை வெற்றி பெற்று சட்டசபை அங்கத்தினராயிருந்தார். நாங்கள் இருவரும் திருவனந்தபுரம் சென்று எங்கள் கட்சி முதன்மந்திரி திரு. பட்டம் தாணுபிள்ளை அவர்களை பேட்டி கண்டு அகஸ்தீஸ்வரம் நடுநிலைப்பள்ளி அபேட்சை குறித்து பேசினோம். இவ்வூருக்கு ஒரு நடுநிலைப்பள்ளியின் தேவையை புள்ளி விவரங்களோடு விளக்கி கூறினோம். அதன் பயனாய், ஏற்கனவே திருவிதாங்கூர்-கொச்சி அரசு எடுத்திருந்த முடிவுக்கு ஏக விதிவிலக்காக அவ்வருடம் அகஸ்தீஸ்வரத்தில் மாத்திரம் ஒரு நடுநிலைப்பள்ளி திறந்திட, சில நிபந்தனைகளோடு, அனுமதி வழங்கப்பட்டது. நேர்மைக்கு எடுத்துக்காட்டாய் விளங்கிய திரு. பட்டம் தாணுபிள்ளை அவர்களுக்கு நமது நன்றி என்றென்றும் உரியது. இருக்கின்ற பிரைமரி பாடசாலை கட்டிடத்திலேயே 24-5-1954ல் ஆறாம் வகுப்பு ஆரம்பமாயிற்று, பின்னர் நடுநிலைப்பள்ளிக்கு வேண்டிய நிலம், கட்டிடம், தளவாடங்கள் ஆகியன குலசேகர விநாயகர் டிரஸ்ட் செலவில் நிவேதிக்கப்பட்டு, அரசு விதித்திருந்த மற்றும் நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்டன.

1954ல் திறக்கப்பட்ட நடுநிலைப்பள்ளியின் மூன்று வகுப்புகளும் 1956ல் பூர்த்தியாகிவிட்டன. அவ்வருடம் கன்னியாகுமரி மாவட்டம் சென்னை மாநிலத்தோடு இணைக்கப்பட்டது. அடுத்த வருடம், அப்போதைய (குலசேகர விநாயகர்) பிள்ளையார் கோவில் டிரஸ்ட்டிகள் அதிக செலவு செய்து, நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாய் உயர்த்திட நன்கு முயன்றனர். ஆனால், துரதிர்ஷ்டவசமாய் அவர்களுடைய முயற்சியின் ஏதுவாய் இவ்வூருக்கு ஒரு உயர்நிலைப் பள்ளி வேண்டியதில்லை என்று சென்னை அரசாங்கம் முடிவு செய்துவிட்டது. இங்கு ஒரு உயர்நிலைப்பள்ளிகள் ஸ்தாபிக்கப்பட்டால், கொட்டாரம், அழகப்பபுரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களிலிருக்கின்ற உயர்நிலைப்பள்ளிகள் பாதிக்கப்படும் அதுமாத்திரமல்ல, அகஸ்தீஸ்வரத்துக்கு மிகவும் அண்மையில் கொட்டாரம் ஊரில் ஒரு உயர்நிலைப்பள்ளி இருப்பதால், அகஸ்தீஸ்வரத்தில் ஒரு உயர்நிலைப் பள்ளி தேவையில்லை என்பன மேற்சொன்ன அரசாங்க முடிவுக்கு காரணங்களாய் காட்டப்பட்டிருந்தன.

1958ல் நானும், திரு. எஸ். சிவசுப்பிரமணியம், திரு.என். நாராயணப்பெருமாள் முதலியோரும் பிள்ளையார் கோவில் டிரஸ்டிகளாய் தேர்வு செய்யப்பட்டோம். நாங்களும் இவ்வூரில் ஒரு உயர்நிலைப்பள்ளி அமைத்திட ஆசைப்பட்டோம். ஆனால், முந்திய டிரஸ்டிகளின் முயற்சியில் விளைந்த அரசாங்க முடிவு முட்டுக் கட்டையாயிருந்ததைக் கண்டு திகைத்தோம். எனினும் மனந்தளராது முயற்சியை மேற்கொண்டோம். இதற்காக நானோ என்னுடைய சகாக்களோ அன்று சென்னை மாநில முதல் மந்திரியாயிருந்த உயர்திரு. காமராஜ் அவர்களையோ அணுகியதில்லை. இவ்வூருக்கு ஒரு உயர்நிலைப்பள்ளி இன்றியமையாதது என்பதற்குரிய நியாயங்களை கீழ்மட்ட கல்வி இலாகா அதிகாரிகளிடம் அழுத்திக் கூறி மனு கொடுத்தோம். முந்தின வருடம் அனுமதி மறுத்ததற்குரிய அரசாங்க ஆவணங்களில் கூறப்பட்டுள்ள காரணங்கள் தப்பானவை என்பதையும் விளக்கினோம். எங்கள் மனுவை நடுநிலைப்பள்ளி இன்ஸ்பெக்டர், மாவட்ட கல்வி அதிகாரி, டிவிஷனல் இன்ஸ்பெக்டர், கல்வி இலாகா இயக்குநர் ஆகிய அனைவரும் ஏற்றுக் கொண்டு ஏகமனதாய் பரிந்துரை செய்து சென்னை அரசுக்கு அனுப்பி வைத்தார்கள். உயர்நிலைப்பள்ளிக்கு தேவையான கட்டிடம் கட்டித்தர வேண்டும் என்ற நிபந்தனையை ஏற்கனவே ஒப்புக் கெண்டிருந்தோம். ஆகவே, அந்த ஒரு நிபந்தனையோடு தடையின்றி அரசு அனுமதி வழங்கிற்று. இருக்கின்ற நடுநிலைப் பள்ளி கட்டிடத்திலேயே 1959 ஜுன் 10ம் தேதி ஒன்பதாம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. பின்னர், நிபந்தனைப்பிரகாரம் பிள்ளையார் கோவில் டிரஸ்ட் செலவில் கட்டிடம் கட்டிக்கொடுத்தோம். முதலமைச்சர் உயர்திரு. காமராஜர் அவர்களால் 02-08-1959ல் அடிக்கல் நாட்டப்பட்ட இக்கட்டிடம் 28-03-1961ல் என்னுடைய தலைமையில் குமரி மாவட்ட கலெக்டர் அவர்களால் திறக்கப்பட்டது. அன்று நான் டிரஸ்ட்டி அல்ல. நான் என்னுடைய தலைமை உரையில் இங்குள்ள மக்கள் ஒத்துழைத்தால் இவ்வூரில் ஒரு கல்லூரி கூட அமைத்திட முடியுமென்று குறிப்பிட்டேன்.

இவ்வூர் பிள்ளையார் டிரஸ்ட் செலவில் நிலம், கட்டிடம் மற்றும் தளவாட சாதனங்கள் தானம் கொடுத்தே, நடுநிலைப்பள்ளி, ஆரம்ப சுகாதார நிலையம், உயர்நிலைப் பள்ளி, ஆஸ்பத்திரி ஆகிய பல நிறுவனங்களை இவ்வூரில் அமைத்திட முடிந்ததென்பது இங்கே குறிப்பிடத்தக்கது. பிள்ளையார் சாமியால் மேலும் பூதானம் கொடுத்திட இயலாமையால் அகஸ்தீஸ்வரம் பஞ்சாயத்து யூனியன் ஆபீஸை அகஸ்தீஸ்வரத்தில் அமைத்திட நான் எடுத்துக் கொண்ட முயற்சி பலிக்கவில்லை அவ்வாபீஸ் அண்மையிலுள்ள பெருமாள்புரம் ஊருக்குப் போயிற்று.

அகஸ்தீஸ்வரம் ஊரில் இப்போதிருக்கின்ற பஞ்சாயத்து அலுவலகமும் பிள்ளையார் சாமியின் அனுபவத்திலிருந்து விட்டுக் கொடுக்கப்பட்ட நிலத்தில் தான் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டிடத்திற்கு 1962 ஜுலை 27ம் தேதி சென்னை மாநில கவர்னர் திரு. விஷ்ணுராம் மேதி

அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. கல்நாட்டு விழாவில் நான் வரவேற்புரை நிகழ்த்தினேன். தமிழ்தெரியாத கவர்னர் அவர்கள் புரிந்து கொள்ளக்கூடியதாய் ஆங்கிலத்தில் உரையாற்றினேன். அவருக்கு முன்னர் இரு கவர்னர்கள் இவ்வூருக்கு வந்துள்ளனர். 1954ல் கவர்னர் திரு.எ.ஜே.ஜான் அவர்கள் வந்து ஒரு சோப் யூனிட்டுக்கு கல் நாட்டினார். அவருக்கு முன்னர் 1838ல் கிழக்கிந்திய கம்பெனியின் சென்னை கவர்னர் சர் சார்லஸ் ட்ரவல்யன் என்ற ஆங்கிலேயர் வந்து இவ்வூர் பிள்ளையார் கோவிலுக்கு உரிமைப்பட்ட நிலத்தில் அக்கோவிலுக்கு அருகாமையில் ஒரு லண்டன் மிஷன் சர்சுக்கு அடிக்கோலிட்டு, அன்று பிள்ளையார் கோவிலின் பரம்பரை தர்மகர்த்தாவாயிருந்த எமது முற்பாட்டனார் குமாரசாமி நாகமணி மார்த்தாண்டர் வீட்டுக்கு விஜயம் செய்துள்ளார் என்ற செய்திகளை எனது வரவேற்புரையில் கூறினேன்.

24-11-1964ல் சென்னை மாநில உணவு மந்திரியாயிருந்த என்.எஸ்.எஸ். மன்றாடியார் இந்த புதிய பஞ்சாயத்து ஆபீஸ் கட்டிடத்தை திறந்து வைக்க வந்திருந்தார். இந்த திறப்பு விழாவிலும் நான்தான் வரவேற்புரை நிகழ்த்தினேன். அப்போது இவ்வூர் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ள ஒரு கிராம பஞ்சாயத்தாய் பொலிவுற்று விளங்கியது. இங்கே, ஆரம்ப சுகாதார நிலையம், ஆஸ்பத்திரி, தபால் ஆபீஸ், சோப் யூனிட், பாலா பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி முதலிய பல ஸ்தாபனங்கள் நன்கு இயங்கிக் கொண்டிருந்தன. நான் பாலர் பள்ளியின் ஆரம்ப செயற்குழு தலைவராயிருந்தேன். 27-10-1964ல் புது கல்லூரி திறக்க அனுமதி கோரி சென்னை பல்கலைக்கழகத்திற்கு அபேட்சை அனுப்பி விட்டிருந்தேன். நான் எனது வரவேற்புரையில் பஞ்சாயத்தின் துரித முன்னேற்றத்தை சுட்டிக்காட்டி ஹைஸ்கூல் திறப்பு விழாவில் கூறியது போல், இவ்வூரில் கல்லூரி திறப்பதற்கு வாய்ப்புள்ளது என்று கூறி, அச்சமயம் நான் ஈடுபட்டிருந்த கல்லூரி முயற்சிக்கு மக்களுடைய ஆதரவை வேண்டினேன். போதிய ஆதரவு கிட்டாத போதிலும், கல்லூரி அமைத்திட்ட கதையை சுருக்கமாகக் கீழே கூறியுள்ளேன்.

கல்லூரிக்கு முன் 1964ல் இவ்வூரில் ஒரு பாலர்பள்ளி தோன்றியது. அப்போது இங்கே மத்திய அரசின் சமூக நல திட்டத்தின் கீழ் செயலாற்றிக் கொண்டிருந்த எக்காயி என்ற கிராம அலுவலர் ஒருவர் இருந்தார். மத்திய அரசின் பொருளுதவியோடு இவ்வூரில் ஒரு பால்வாடி (பாலர்பள்ளி) அமைத்திடலாமென்று அவர் மூலம் அறிந்தேன். கொட்டாரம் ஊரில் அம்மாதிரி ஒரு பால்வாடி நடத்திக் கொண்டிருந்த திரு. இராமலிங்கம் பிள்ளை அவர்களோடு அதைப்பற்றி நன்றாய் ஆராய்ந்தேன். அன்னார் நடத்துகின்ற பால்வாடி சொஸைட்டியின் சட்டதிட்டங்களின் நகல் ஒன்றை பெற்றுக் கொண்டு அகஸ்தீஸ்வரத்தில் பாலர்பள்ளி அமைப்பதற்கு ஆவன செய்ய எத்தனித்தேன். கொட்டாரம் பால்வாடி சொஸைட்டியின் சட்ட திட்டங்களைத் தழுவி நாட்டுப்புற வளர்ச்சி மன்றம் (Rural Development Association) என்ற பெயரில் ஒரு சங்கத்தின் விதிமுறைகளை ஆங்கிலத்தில் வகுத்து, அச்சங்கத்தின் ஆரம்ப செயற்குழுவுக்கு என்னை

தலைவராகவும், தலைமை தாங்க மறுத்த அமரர் திரு.ஜி.ஏ. மார்த்தாண்டன் அவர்களை பொருளாளராகவும் குறிப்பிட்டு சங்கப்பதிவு சட்டத்தின் கீழ் அச்சங்கத்தை பதிவு செய்தேன். அடுத்தபடியாக திரு.ஜி.ஏ. மார்த்தாண்டன் அவர்களுடைய நிலத்தில் அன்னாரின் முழுச்செலவில் ஒரு சிறிய களிமண், ஓலைக்கூரை புரையை கட்டினேன். ஒரு ஆசிரியையும் நாங்கள் நியமித்தோம். கட்டிய களிமண் புரையில் 11.8.1964ல் ஐந்தாறு குழந்தைகளோடு ஆரம்பிக்கப்பட்ட பள்ளி நாளொரு மேனியாக வளர்ந்து கொண்டிருக்கையில் நிதி உதவிக்காக மத்திய அரசுக்கு மனுச் செய்தோம். சங்கத்தில் சேர்ந்த அங்கத்தினரிடமும் மற்றோரிடமும் நன்கொடை வசூலித்தும், சுமார் 50 வீடுகளில் மாதந்தோறும் பிடி அரிசி சேகரித்து அதை விற்று முதலாக்கியும், மாதச் செலவுகளை செய்தோம். திரு. ஜி.ஏ. மார்த்தாண்டருடைய ஆதரவாலும் பொருளுதவியாலும் தோன்றிய பாலர்பள்ளியானது. கல்லூரிக் கனவு கொண்டிருந்த என்னை தலைவராகப் பெற்று ஒழுங்காய் இயங்கிக் கொண்டிருந்தது. அமரர் திரு. ஜி.ஏ. மார்த்தாண்டன் எனது பெரியப்பாவின் கொள்ளுப்பேரன் என்பதை இங்கே கூறிக்கொள்கிறேன். என்னிலும் மிக்க இளையவர். எமது பிரார்ஜித சம்பத்தில் என்னை விட அறுமடங்கு அதிக சம்பத்தை உடையவர். உதாரகுணம் படைத்த உத்தமர். ஏழைகளுக்கு இரங்கி ஈந்திடுவார். மக்கள் நலப் பணிகளுக்கு மனமுவந்து நிதியுதவிக் கொண்டிருந்த அன்னாரின் மறைவு இவ்வூருக்கு பேரிழப்பாகும். அன்னார் இருக்கும்போதே பாலர்பள்ளிக்கு மத்திய அரசின் நிதி உதவி கிடைத்துவிட்டது. பக்கத்திலுள்ள புறம்போக்கு பூமியில் பாலர்பள்ளிக்கு நல்லதோர் சிறிய கட்டிடமும் அவரது முயற்சியால் கட்டப்பட்டது. இப்போது அப்பாலர் பள்ளி ஒழுங்காய் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

நான் 1961 முதல் நெடுநாளாய் மனக்கோட்டை கட்டிக் கொண்டிருந்த கல்லூரியைப் பற்றி எத்தனையோ எண்ணங்கள் என் மனதில் எழுந்தன. அக்கல்லூரி நமது சமூகத்துக்கு சொந்தமாயிருக்க வேண்டும், அதற்கு சாதிப்பேரோ, சமயப்பேரோ வைப்பது சரியல்ல, விவேகானந்தரின் பெயரை அதற்கு சூட்ட வேண்டும். அது மாத்திரமல்ல, கிறிஸ்தவ கல்விக் கூடங்களில் விவிலியம் கற்பிக்கப்படுவதைப் போல் எனது கற்பனைக் கல்லூரியில் பரமஹம்சர் மற்றும் விவேகானந்தர் போதனைகளின் அடிப்படையில் அறநெறிகள் கற்பிக்கப்பட வேண்டும், என்பன போன்ற கருத்துக்கள் என் மனதில் எழுந்தவண்ணம் இருந்தன. அதே சமயம் நான் நாகர்கோவில், பாளையங்கோட்டை, விருதுநகர், சென்னை முதலிய இடங்களுக்குச் சென்று, விஷயந் தெரிந்தவர் களிடமிருந்து புதுக்கல்லூரிக்கு அனுமதி பெறக்கூடிய வழிவகைகள் பற்றியும் கல்லூரிக்கு தேவைப்படும் நிலம், கட்டிடம், நிதி மற்றும் சாதனங்கள் பற்றியும் விசாரித்து அறிந்து கொண்டிருந்தேன். கல்லூரிக்கு தேவைப்படும் நிலமோ, நிதியோ இல்லாத நான். கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்ட முடவனை ஒத்திருந்தேன்.

இருக்கவே, ஒருநாள் சாயுங்காலம் திரு. ஜி.ஏ. மார்த்தாண்டர் அவர்களுடைய பெரியவீட்டில் நான் அன்னாரோடு கல்லூரி ஸ்தாபிப்பது

பற்றி உரையாட நேர்ந்தது. அந்த நாளன்று அவர் தனது மகளை பாளையங்கோட்டை ஸாராடக்கர் கல்லூரியிலும், நான் எனது மகனை பாளையங்கோட்டை ஸெயிண்ட் ஜான்ஸ் கல்லூரியிலும் கஷ்டப்பட்டு சேர்த்த அனுபவம் எங்களுக்கு இருந்தது. அந்த நாள் 1964 ஜுன் - ஜுலை வாக்கில் இருந்திருக்க வேண்டும். அட்மிஷனுக்கு நாங்கள் பட்ட கஷ்டங்களை சுட்டிக்காட்டி, இவ்வூரில் ஒரு கல்லூரி அமைத்திட்டால், நாம் நமது பிள்ளைகளை பிற கல்லூரிகளில் சேர்ப்பதற்காக கைகூப்பி காத்து நிற்க வேண்டி வராது. மேலும், இங்குள்ள ஏழை மாணவ, மாணவிகளுக்கு அக்கல்லூரி மிகவும் பயனுள்ளதாய் அமையும் என்று முடிவு செய்தோம். ஆனால், கல்லூரி அமைப்பது இலகுவான காரியமல்ல, கல்லூரிக்கு குறைந்தபட்சம் 30 ஏக்கர் நிலம் தேவைப்படும். இப்போது கல்லூரி இருக்கிற இடத்தை குறிப்பிட்டு சொல்லி, அந்த இடத்தில் நமக்கும் நமது உறவினருக்கும் அடுத்தடுத்து 60 ஏக்கருக்கு மேல் நிலம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், அதில் 30 ஏக்கரை கல்லூரிக்கென்று சேர்த்துவிட முடியுமா? நிலம் கிடைத்தால் மட்டும் போதாதே, நிதியும் இலட்சக்கணக்கில் வேண்டுமே, அதற்கென்ன செய்வது. இவை பெரிய பிரச்சனைகள் என்று நான் சொன்னேன். சொன்னதும் அந்த தருமபுண்ணியவாளர், நீங்கள் கல்லூரி கட்டுவதற்கு முயற்சி செய்வதாயிருந்தால் அந்த இடத்திலுள்ள என்னுடைய ஐந்தரை ஏக்கர் நிலத்தை நான் கல்லூரிக்கு தருகிறேன் என்று தாமாகவே வாக்களித்தார். அவருடைய ஐந்தரை ஏக்கர் நிலத்தைத் தொட்டுக் கிடக்கின்ற நிலங்களில் ஒன்றரை ஏக்கர் நிலம் எனக்குச் சொந்தமானது. எனவே, இரண்டும் சேர்த்து ஏழு ஏக்கர் நிலம் கல்லூரிக்கு கிடைப்பது ஒரு சில நிமிடங்களில் உறுதியாகிவிட்டது. உடனே என் உள்ளத்தில் ஒரு நம்பிக்கை உதயமாயிற்று. கல்லூரிக்கு தேவையான நிலத்தை தானமாக பெற்று விடலாமென்று தோன்றியது.

மேற்படி ஏழு ஏக்கரை அடுத்தடுத்துள்ள நிலங்களின் உரிமையாளராகிய எமது உறவினர் சிலரைக் கண்டு கேட்டேன். எனது தம்பிமார் (சித்தப்பா பிள்ளைகள்) திரு. கே. குமாரசாமி (இன்றைய கல்லூரி செயலாளர்) திரு.கே. சந்திரசேகரபாண்டியன் இருவரும், தலா இரண்டு ஏக்கர் தரலாம் என்று சம்மதித்தனர். இன்னொரு தம்பி (பெரியப்பா பிள்ளை) திரு. வி. குமாரசாமி ஒரு ஏக்கரும் வாக்களித்தனர். எனது மைத்துனர் (மனைவியின் சகோதரர்) முன்னாள் எம்.எல்.ஏ., திரு. சி. இராமசாமி, திரு.சி. சங்கரவடிவு, திரு. சிற்றி, பெருமாள், திரு. சி. ரங்கசாமி ஆகிய நால்வரும் தலா மூன்று ஏக்கர் தானம் தந்திட மனம் இசைந்தனர். மற்றவர்களுடைய சம்மதத்தையும் பெற்றுவிடலாமென்று நம்பினேன்.

கல்லூரி ஸ்தாபிப்பதைப் பற்றி ஆலோசிப்பதற்காக ஒரு பொதுக்கூட்டம் கூட்ட எண்ணி குறிப்பிட்ட சுமார் 50 பேருக்கு அழைப்பு அனுப்பினேன். 1964 அக்டோபர் 18ம் தேதி அகஸ்தீஸ்வரம் அரசு உயர்நிலைப்பள்ளியில் வந்து கூடுமாறு அவர்களை அழைத்தேன். குறிப்பிட்ட நேரத்தில் நானும் திரு.ஜி.ஏ. மார்த்தாண்டரும் காத்திருந்தோம்.

அழைக்கப்பட்டவர்களில் வந்தவர்கள் இருவரே, வராதவரைப் பற்றி கவலைப்படாது நாங்கள் கலைந்து சென்றோம்.

அடுத்து கல்வி ஆண்டு 1965-66ல் புதிய கல்லூரி திறப்பதற்கு அபேட்சிக்க வேண்டி சென்னை பல்கலைக்கழகத்துக்கு மனு அனுப்ப வேண்டும். எனவே, 27-10-1964ல் சென்னை பல்கலைக்கழகத்துக்கு அபேட்சை அனுப்பினேன். அப்போது மதுரையில் பல்கலைக்கழகம் இல்லை. அபேட்சை மிக்வும் சுருக்கமாக எழுதினேன். கீழே கையெழுத்திட்டுள்ள நாங்கள் எங்களுக்கு சொந்தமான இன்ன இடத்திலுள்ள 30 ஏக்கர் நிலத்தில், பல்கலைக்கழக விதிகளை அனுசரித்து, அடுத்த வருடம் ஒரு கல்லூரி நிறுவ விரும்புகிறோம். தயை கூர்ந்து எங்களுக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று சுருக்கமாக எழுதினேன். நானும் திரு.ஜி.ஏ. மார்த்தாண்டரும் வேறு சிலரும் கையெழுத்திட்டோம்.

இந்த மனுவை பல்கலைக்கழகம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதற்கு முன், மேல் நடவடிக்கைகளை நியம பூர்வம் ஒழுங்காக செய்து கொள்வது நல்லது. இது குறித்து துணைவேந்தரை கண்டுபேச வேண்டி வரலாம். பேச நேரிடும் போது ஒரு கல்லூரி நடத்த தகுதியுள்ள ஒரு சங்கம் உள்ளது என்று துணைவேந்தரை அறிவுறுத்த வேண்டும். ஆகவே, முதலாவதாக விவேகானந்தா காலேஜ் அஸோசியேஷன் (Vivekananda College Association) என்ற பெயரில் ஒரு முறைசாரா சங்கத்தின் சட்டதிட்டங்களை வகுத்து வைத்துக்கொண்டேன் என்னை அச்சங்கத்தின் செயலாளராகவும் திரு.ஜி.எ. மார்த்தாண்டரை பொருளாளராகவும் வைத்துக் கொண்டேன். அகஸ்தீஸ்வரத்தில் விவேகானந்தா கல்லூரி என்ற பெயரில் ஒரு கல்லூரி அமைப்பதே சங்கத்தின் பிரதான நோக்கம் ஏ கிளாஸ் பங்கு ஒன்றுக்கு ரூ. 5000/- வீதமும், பி கிளாஸ் பங்கு ஒன்றுக்கு ரூ. 1000/- வீதமும், சி கிளாஸ் பங்கு ஒன்றுக்கு ரூ. 500/- வீதமும், சங்கத்துக்கு பங்காளர்களைச் சேர்ந்து அவர்களிடமிருந்து பங்குகளாகவும், மற்றும் பொதுமக்களிடமிருந்து நன்கொடைகளாகவும் நிதி திரட்டி, கல்லூரி நிறுவி நடத்துவதற்கு ஆவன அனைத்தும் செய்திட சங்க விதிமுறைகளில் வகை செய்யப்பட்டிருந்தது.

இந்த சங்கத்தின் பேருக்கு பூதான சம்மத பத்திரங்களை எழுதி வாங்கினேன். கல்லூரிக்கு பூமிதானம் தந்திட மனமிசைந்துள்ள ஒவ்வொருவரிடமிருந்தும், சங்கத்துக்காக, செயலாளராகிய என்பேருக்கு இரண்டரை ரூபாய் முத்திரைத்தாளில் பூமிதான ஒப்பந்த பத்திரம் ஒன்று எழுதி வாங்கி ஒரு கோர்வையில் சேர்த்தேன். நான் கொடுக்க வேண்டிய ஒன்றரை ஏக்கருக்கும் ஒரு ஒப்பந்த பத்திரமும் எழுதி சேர்த்துக் கொண்டேன். என்னுடைய நிலத்தைத் தொட்டுக்கிடக்கின்ற ஒரு ஏக்கர் நிலத்தை கல்லூரிக்கு தானமாக பெற்றிடக் கருதி அந்நிலத்தின் உரிமையாளராகிய பெருந்தகை வித்வான் திரு. சி. தமிழ்ராஜ் அவர்களிடம் கேட்டேன். அவர்கள் தடையின்றி சம்மதித்தார்கள். அவர்களிடமிருந்தும் ஒரு பூமிதான ஒப்பந்த பத்திரம் எழுதி வாங்கி கோர்வையில் சேர்த்துக் கொண்டேன்.

அடுத்தபடியாக, கல்லூரிக்கு நிதி உதவ சம்மதிக்கின்றவரை தேடிப்பிடித்து அவர்களுடைய வாக்குறுதிகளை பெற வேண்டும். ஆகவே, பாலர்பள்ளியை திரு.ஜி.ஏ. மார்த்தாண்டரின் பொறுப்பில் விட்டுவிட்டு, அப்பள்ளியின் நிர்வாகக் குழு தலைவர் பதவியிலிருந்து விலகினேன்.

அப்போது நான் கன்னியாகுமரி விவேகானந்தா பாறை நினைவுச்சின்ன கமிட்டியில் அங்கம் வகித்துக் கொண்டிருந்தேன். இக்கமிட்டி அகில இந்திய விவேகானந்தா நினைவுச் சின்ன கமிட்டியில் கன்னியாகுமரி கிளை கமிட்டியாகும். அகில இந்திய கமிட்டியின் ஒப்பந்தம் செயலாளராக இருந்த திரு. ஏகநாத் ரானடே அவர்களால் அமைக்கப்பட்ட இக்கிளைக் கமிட்டியில் நான் வைஸ் பிரஸிடெண்ட் பதவி வகித்துக் கொண்டிருந்தேன். நாங்கள் பாறைக்குச் சென்று நினைவுச் சின்னத்துக்கு நிச்சயிக்கப்பட்ட இடத்தில் பூமிபூஜை செய்துவிட்டு வந்த பின்னர் விளைந்த தொல்லைகளின் நிமித்தம் பல கமிட்டி அங்கத்தினர் ஒதுங்ககிகொண்டபோதிலும், நான் விலகவில்லை. நான் கமிட்டி கூட்டங்களிலும், பொதுக் கூட்டங்களிலும் பவனிகளிலும் கலந்து கொள்ள தவறியதில்லை. கமிட்டிக் கூட்டத்தில் ஒரு நாள் நினைவுச் சின்னத்துக்காக கன்னியாகுமரி மாவட்டத்தில் பணம் வசூலிக்க முடிவு செய்யப்பட்டது. அப்போது நான் அகஸ்தீஸ்வரத்தில் விவேகானந்தா கல்லூரி கட்டுவதற்கு நிதிதிரட்ட எத்தனிக்கிற தருவாயிலிருந்தேன். அதை கமிட்டியில் தெரிவித்து விட்டு, நான் பாறை நினைவுச் சின்னத்துக்கு பணம் வசூலிக்க செல்லவில்லை. அவ்வளவு தான் கமிட்டியிலிருந்து நான் விலகவில்லை. பாறையில் எழுப்ப எண்ணியுள்ள விவேகானந்தர் நினைவுச் சின்னம் வணங்குவதற்கேற்ற ஒரு கோவில் நான் நிறுவ எண்ணியுள்ள கல்லூரி நினைவுச் சின்னம். ஒரு கலைக்கோவில் இரண்டும் வேண்டும் என்பதே எனது கருத்து. இக்கருத்தை 31-08-1970ல் விவேகானந்தா கல்லூரியின் நிரந்தர கட்டிடத்திற்கு கல் நாட்ட வந்திருந்த மேதகு ராஷ்ட்ரபதி திரு.வி.வி. கிரி அவர்களை நான் வரவேற்றபோது, எனது வரவேற்புரையில் கூறினேன். இவ்விஷயத்தைப் பற்றி சென்னையிலிருந்து 1981 அக்டோபரில் வெளியான நாகமணி என்ற மாதாமாத சஞ்சிகையில் கூறப்பட்டுள்ள செய்திகள் சில சரியல்ல.

கல்லூரி நிறுவ தேவையான நிலங்கள் விவேகானந்தா கல்லூரி சங்கத்துக்கு கிடைப்பது நிச்சயமாகிவிட்டது. ஆனால், இன்னொரு முக்கிய தேவையான நிதி துளியேனும் சங்கத்தினிடம் இல்லை. சங்க விதிகளை அனுசரித்து பங்குகளாகவும் நன்கொடைகளாகவும் நிதி திரட்ட வேண்டும். நிதி உதவ சம்மதிக்கின்றவருடைய வாக்குறுதிகளை முதலில் ஒரு பதிவு புத்தகத்தில் பதிவு செய்து கொள்வது நல்லது என்று எண்ணினேன். அதற்கென்று அச்சிட்ட ஒரு புத்தகத்தை தயார் செய்து வைத்துக் கொண்டு இப்பிரதேசத்திலுள்ள மக்களை அணுகி அதில் அவர்களுடைய வாக்குறுதிகளை பதிவு செய்தோம். இப்பணியில், சுமார் நாற்பது வருடகாலமாக சர்க்கார் அலுவல்களிலும் மற்றும் பொதுநலச் சேவைகளிலும் எனக்கு ஏற்பட்டிருந்த மக்களோடுள்ள தொடர்பும், நான்

பெற்றிருந்த அனுபவமும் மக்களின் நன்மதிப்பும், நல்ல பயனளித்தன என்றால் அது மிகையாகாது. அனேகம்பேர் கல்லூரி சங்கத்தின் ஏ, பி, சி கிளாஸ் அங்கத்தினராய்ச் சேர்ந்திட சம்மதித்து முறையே ரூ. 5000/- ரூ. 1000/- ரூ. 500/- தருவதாகவும் வேறு பலர் நன்கொடைகள் தருவதாகவும் வாக்களித்து பதிவு புத்தகத்தில் கையெழுத்திட்டனர். இவர்களில் கல்லூரி அமைத்தல் ஒரு நற்பணி எனக் கருதி வாக்களித்தவரும் உண்டு. வரப்போகும் கல்லூரியில் வேலைவாய்ப்பை எண்ணி வாக்களித்த வருமுண்டு. முழுமனதோடு வாக்குறுதி தந்தவர்கள் பலா. அரை மனதோடு எழுதியவர்களும் சிலர் உண்டு. நான் என்னால் இயலாத காரியத்தில் இறங்கியுள்ளேன் என்றெண்ணி என்னை கல்லூரிப்பித்தன் என்று ஏளனம் செய்தவருண்டு. இவர்களுடைய வாக்குறுதிகளை பதிவு செய்து கொள்ளும் பொருட்டு வாடகை காரில் இம்மாவட்டத்தை ஓய்வின்றி சுற்ற வேண்டியிருந்தது. மாவட்டத்துக்கு வெளியே திருநெல்வேலி, திருச்செந்தூர், சென்னை முதலிய இடங்களுக்கும் செல்ல வேண்டியிருந்தது. திருவனந்தபுரத்துக்கு இரண்டு, மூன்று முறை சென்று காருண்ய திருவிதாங்கூர் மஹாராஜா அவர்களையும் கண்டேன். ஒரு பொதுக் காரியத்துக்கு பணப்பிரிவு செய்ய சுற்றும் போது நானும் திரு.ஜி.ஏ. மார்த்தாண்டரும், சேர்ந்தோ தனித்தனியாகவோ செல்வது உகந்ததல்ல என்று கருதி, ஒரு சில நண்பர்களையும் காரில் எங்களோடு கூட்டிக் கொண்டு சுற்றுவோம். இவ்விஷயத்தில் சென்னை நாகமணி நர்ஸிங் ஹோம் தம்பதிகள் டாக்டர் சி. குமாரசாமி அவர்களும் டாக்டர் ஞானசௌந்தரி அவர்களும் செய்த பேருதவி பாராட்டுதற்கு உரியது. இங்கும் சென்னையிலும் அவர்களுடைய காரில் அவர்களுடைய செலவில் 15 நாட்களுக்கு மேல் சுற்றினோம். வாக்குறுதி செய்யப்பட்ட தொகை ஏறத்தாழ மூன்று இலட்சமாகும். இதில் ஒரு காசுகூட யாரிடமிருந்தும் அப்போது வாங்கவில்லை.

அடுத்தபடியாக, பூமிதான ஒப்பந்த பத்திரங்களையும் நிதி உதவியாளரையும் கொண்டு நான் சென்னைக்குச் சென்றேன். இதற்கு முன்னரும், பின்னரும், தனியாகவும் சிலவேளைகளில் துணைவரோடும் கல்லூரி விஷயத்தை முன்னிட்டு பலமுறை சென்னைக்கு சென்றுள்ளேன். அங்கே நான் தங்குவது எவரஸ்ட் லாட்ஜாகும். அங்கு போகும்போதெல்லாம். எனக்கு பேருதவியாயிருந்தவர் எனது மூத்தண்ணாவின் மைந்தர் டாக்டர். சி. குமாரசாமி என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இம்முறை நான் சென்னை சென்றபோது அவருடைய உதவியோடு அன்று சென்னை பல்கலைக்கழக சிண்டிக்கேட் அங்கத்தினராயிருந்த டாக்டர். எம். நடராஜன் அவர்களை சந்தித்து கல்லூரி அபேட்சையைப் பற்றி பேசினேன். 1964 நவம்பர் 30ம் தேதி நானும் டாக்டர் நடராஜனும் துணைவேந்தர் டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் அவர்களை நேர்முகம் கண்டு கல்லூரி அபேட்சை குறித்து பேசினோம். அகஸ்தீஸ்வரத்தில் ஒரு கல்லூரி அமைப்பதற்கேற்ற சாத்தியக் கூறுகளை எடுத்துரைத்தோம். துணைவேந்தர் அவர்கள் புதுக்கல்லூரி

திறப்பதற்கு என்னென்ன தேவை என்று விளக்கிக் கூறிய சாதகமான பதிலைக் கேட்டுவிட்டு மகிழ்ச்சியோடு விடைபெற்றோம். 18-1-1964ல் பல்கலைக்கழக பதிவாளரிடமிருந்து நீண்டதோர் கடிதம் கிடைத்தது. அதில் துணைவேந்தர் எங்களிடம் கூறியது போல, விண்ணப்பித்துள்ள புதுக்கல்லூரியின் தேவைகளை நிறைவு செய்யக் கூடுமாயின், அடுத்த வருடம் கல்லூரி திறப்பதற்கான முன்னேற்பாடுகளை செய்யுமாறு கூறப்பட்டிருந்தது.

ஆனால், ஆவன அனைத்தும் செய்தவற்கு வேண்டிய முதல் என்னிடம் இல்லை. கல்லூரிக்காக இணைபிரியாது என்னோடு ஒத்துழைத்துக் கொண்டிருந்த திரு. ஜி.ஏ. மார்த்தாண்டரிடமும் இல்லை. தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த விவேகானந்தா கல்லூரி சங்கத்திடம் இல்லை. இதுவரை கல்லூரிக் கென்று யாரிடமும் பணம் வாங்காததால், சங்கத்துக்கு வாக்குறுதி செய்யப்பட்டிருந்த மூன்று இலட்சமும் கறிக்கு உதவாத ஏட்டுச் சுரைக்காயாக இருந்தது. அதை வசூல் செய்ய எத்தனிக்கும் முன்னர், பணப் பாதுகாவலுக்கேற்ற முறையில் விவேகானந்தா கல்லூரி சங்கத்தை நியமப்படி பதிவு செய்து கொள்வது நல்லது என்று எண்ணி, அதில் விதிமுறைகளை சங்கப்பதிவு சட்டத்திற்கேற்ப திருத்தி விரிவுப்படுத்தி எழுதினேன். அகஸ்தீஸ்வரத்தில் விவேகானந்தா கல்லூரி என்ற பெயரில் ஒரு கல்லூரி அமைப்பதே சங்கத்தின் பிரதான நோக்கம். சங்க விதிகளில் 14 பேர் கொண்ட ஒரு இயக்குநர் குழு குறிப்பிட்டுள்ளது. இந்த போர்டில், ஒன்பது பேர் ஒரு ஏக்கருக்கு குறையாமல் ஐந்தரை ஏக்கர் வரை கல்லூரிக்கு நில தானம் தருவதாக ஒப்பந்தம் செய்துள்ளனர். மேற்கூறிய ஒன்பது பேரும் குறைந்த அளவிலான சிறிய துண்டு நிலங்களை தானம் தருவதாக ஒப்பந்தம் செய்துள்ள வேறு ஐவரும் சமத்துவ உரிமையுள்ள உறுப்பினராய் சேர்க்கப்பட்டுள்ளனர். சங்கத்தின் ஆரம்ப செயற்குழு ஒன்றும் விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்செயற்குழு, கல்லூரிக்கான முயற்சிகளில் முன்னின்று செயலாற்றிக் கொண்டிருந்த (Cheif Promotor) என்னை செயலாளராயும், என்னோடியைந்து செயலாற்றிக் கொண்டிருந்த திரு.ஜி.ஏ. மார்த்தாண்டரை பொருளாளராயும், ஏ கிளாஸ் பங்கு ஒன்றுக்கு ரூ. 5000- தருவதாக வாக்களித்திருந்தவர்களில் டாக்டர் பத்மனாபன் அவர்களை பிரஸிடன்டாயும், திரு.பி.பி. முனிசாமி, திரு. பி. சிவராமகிருஷ்ண ஐயர், திரு. ஏ. பூதலிங்க பணிக்கர் ஆகிய வேறு மூவரை வைஸ் பிரஸிடன்டுகளாயும், திரு. எஸ். பொன்னையா, திரு. ஏ. ராஜகோபால் ஆகிய இருவரை கூட்டு உறுப்பினர்களாயும் சேர்த்தேன். இவ்வாறு இந்து சமூகத்துக்கு நல்ல பிரதிநிதித்துவம் அளித்தேன். சென்னையில் டாக்டர். எம். நடராஜன் அவர்கள் என்னிடம் கூறியபடி Vivekananda Colloege Association என்றிருந்த சங்கப்பெயரையும், விவேகானந்தா எட்யூக்கேஷனல் சொஸைட்டி (Vivekananda Educational Society) என்று மாற்றினேன். இந்த சொஸைட்டி 1964ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28ம் தேதியன்று

சங்கப்பதிவு சட்டத்தின் கீழ் 24ம் எண்ணில் நாகர்கோவில் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை கல்லூரிக்கென்று யாரிடமிருந்தும் காசு வாங்கினதில்லை. இதன் பின்னர்தான் ரசீது புத்தகத்துடன் நிதி உதவ வாக்களித்தவரிடமிருந்து பணம் பிரிக்க புறப்பட்டோம். பல நாட்கள் சுற்றினோம். பெரும்பான்மையோரும் தயங்கித் தயங்கி சிறிது சிறிதாகத்தான் தந்தனர். பல நாட்கள் சுற்றிய பின்பும் கணிசமான தொகை பிரியாதது கண்டு சற்று அதிருப்தி அடைந்தேன். இந்நிலையில், கல்லூரி கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்ட நிச்சயிக்கப்பட்டிருந்த 1965 மார்ச் 17ம் தேதி புதன்கிழமையன்று காலையில் கொத்தவேலை காண்ட்ராக்டர் தாமரைக்குளம் திரு.எஸ். இராசையா பூமி பூஜைக்குத் தேவையான எல்லாம் தயார் செய்து வைத்திருந்தார். கல்நாட்டச் சென்ற நான் பணப் பற்றாக்குறையை எண்ணி சற்று தயங்கினேன். ஆயினும் கல் நாட்டு வைபவத்துக்கு வந்திருந்த கொட்டாரம் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் வித்வான் எஸ். செண்பகலிங்கம் அவர்களுடைய வற்புறுத்தலின் மேல் நான் அன்றைய தினமே (17-3-1965) அடிக்கல் நாட்டிவிட்டேன். அன்று தொட்டு காண்ட்ராக்டரும் கட்டிடம் கட்டுவதில் ஈடுபட்டு விட்டார். பின்னர், நான் அடிக்கல் நாட்டிய கட்டிடத்தில் கல்லூரியின் பெயர் தாங்கிய எழுத்துக்கல் ஒன்று 1965 மே 21ம் தேதி டாக்டர். பத்மனாபன் அவர்களால் வைக்கப்பட்டது.

கட்டிடம் கட்டப்படுமிடத்திற்கு கல்லும் மற்றும் சாதனங்களும் கொண்டு செல்ல, நல்ல பாதை இல்லாதிருந்தது. ஒரு பர்லாங்கு தூரத்துக்கு ரோடில்லை. ஆகவே, காண்ட்ராக்டர் மிகமிக சிரமப்பட்டு வண்டிகளிலும் தலைமைச்சுமைகளிலும் சாதனங்களை கொண்டு சென்று கட்டிட வேலையை தொடர்ந்து செய்து கொண்டிருந்தார். தச்சுவேலை காண்ட்ராக்ட் எடுத்திருந்தவர் குண்டலூர் திரு. யோவான் அவரும் தமது வேலைகளை ஆரம்பித்து செய்து கொண்டிருந்தார். ஃபர்னிச்சர் காண்ட்ராக்டர் எடுத்திருந்த இரணியல் ஃபர்னிச்சர் மார்ட் உரிமையாளர் திரு. சார்லஸ், மேசை, நாற்காலி, பெஞ்ச், டெஸ்க், அலமாரி மற்றும் தளவாடங்களை செய்து கொண்டிருந்தார். நானும் திரு. ஜி.ஏ. மார்த்தாண்டரும் கிடைத்தவர்களை கூட்டிக் கொண்டு வாடகை காரில் சுற்று சுற்றென்று சுற்றி வாக்களித்திருந்தவர்களை தேடிப்பிடித்து பணம் பிரித்துக் கொண்டிருந்தோம். காசு தருவதற்கு தயங்கிய சிலரிடமிருந்து அரசு மற்றும் மின்வாரிய வட்டிக் கடன்பத்திரங்களை வாங்கிச் சேர்த்தோம். நாள் செல்லச் செல்ல பணப்பிரிவு அதிகரித்துக் கொண்டிருந்தது. பலர் பணம் தர முன்வந்தனர். கல்லூரி ஒன்று வருவதில் ஆர்வமுற்றோரும், வரப்போகும் கல்லூரியில் வேலைவாய்ப்பை நம்பியவர்களும், தாமாகவே வந்து ஆயிரக்கணக்கில் தந்துவிட்டுச் சென்றனர். அகஸ்தீஸ்வரத்தை அடுத்துள்ள ஏ கிளாஸ் பங்காளிகள் தங்கள் பங்குத் தொகையை தவணைகளாக அடிக்கடி தந்து கொண்டிருந்தனர். பணம் பிரியப்பிரிய காண்ட்ராக்டர்களுடைய பகுதிவேலை

பட்டியல்களின்படி செல்ல வேண்டிய பணத்தை செலுத்திக் கொண்டிருந்தோம். கட்டிட வேலைகள் துரிதமாக முன்னேறிக் கொண்டிருந்தன. அதே சமயம் தானம் தருவதாக வாக்குறுதி செய்யப்பட்டிருந்த நிலங்களை சொஸைட்டி பேருக்கு தானப்பிரமாணங்கள் எழுதி பதிவு செய்து உரிமைப்படுத்திக் கொண்டோம். கிரையத்துக்கு கிட்டிய பக்கத்திலுள்ள நிலங்களையும் வாங்கிச் சேர்த்து கல்லூரி வளாகம் சுமார் அறுபது ஏக்கராக விரிவுபடுத்தப்பட்டது. இப்பணியில் உதவிபுரிந்தவர்களில் ஒருவர் எனது அருமை நண்பர்-கொட்டாரம் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் திரு. என். சிவசுப்பிரமணியம் குறிப்பிடத்தக்கவர் ஆகும்.

கல்லூரி ஸ்தாபிப்பதற்கு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளை பார்வையிடுவதற்காக 1965 ஜுன் 20ம் தேதி பல்கலைக்கழக ஆய்வுக்குழு வருவதாக தகவல் கிடைத்தது. ஆய்வுக்குழு வருவதற்கு முன் கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்க வேண்டும். சகல தளவாடங்களும் தயாராயிருக்க வேண்டும். வகுப்பறை கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. ஆனால் விஞ்ஞான ஆய்வுக்கூட கட்டிட வேலை அரைகுறையாயிருந்தது. கொத்தவேலை, தச்சு வேலை காண்ட்ராக்டர்கள் இருவரும் தத்தம் வேலைகளை இராப்பகலாய் செய்து ஆய்வுக்கூடத்தையும் முற்றுப்பெறும் நிலைக்கு கொண்டு வந்துவிட்டனர். ஃபர்னிச்சர் காண்ட்ராக்டர் வகுப்புகள் ஆரம்பிக்க தேவையான மேசை நாற்காலி பெஞ்ச் டெஸ்க் முதலிய சாமான்களைச் செய்து வண்டிவண்டியாக கொண்டு வந்து ஆய்வுக்குழு வருவதற்கு முன்னமே கல்லூரி கட்டிடத்திற்குள் அடுக்கிவிட்டார்.

பணம் பிரியப்பிரிய செலவாகிக் கொண்டிருந்தமையால் விஞ்ஞான பாடங்கள் கற்பிப்பதற்கான விலை மதிப்புமிக்க கருவிகளும், கண்ணாடி சமான்களும், இராசயணப்பொருட்களும், நூல்நிலைய புத்தகங்களும் வாங்குவதற்கு தேவையான பல்லாயிரம் ரூபாய் கைவசமில்லாதிருந்தது. ஆகவே, நான் நாகர்கோவிலில் விஞ்ஞான கருவிக்கடையொன்றின் அதிபரான எனது நண்பர் திரு. ஜெகநாத்ஸன் அவர்களிடம் சென்று விஷயங்களைச் சொல்லி கேட்டேன். தேவையான கருவிகள் மற்றும் பொருட்கள் அனைத்தும் என்னுடைய பொறுப்பில் கடனாக தந்துதவ அவர் சம்மதித்தார். கல்லூரிக்கு அனுமதி நிச்சயமாக கிடைக்கும் என்று வாழ்த்துக் கூறி, அனுமதி கிடைத்தபின் அவசியமானவற்றை எடுத்துக் கொண்டு பணம் தாருங்கள். மற்றப்பொருட்களை திருப்பி அனுப்பி வையுங்கள் என்று கூறி கல்லூரியின் ஆரம்ப தேவைக்கும் மிஞ்சிய அளவில் சுமார் ரூ. 25,000 விலை மதிப்புள்ள விஞ்ஞான கருவிகளையும் மற்றும் பொருட்களையும் பெட்டிகளில் பத்திரமாக பொதிந்து, ஆய்வுக்குழு வருவதற்கு முந்தின நாள், தமது காரிலேயே அனுப்பி வைத்தார்.

கல்லூரிக்கு தேவையான புத்தகங்களை கடனாக தந்து உதவுமாறு நாகர்கோவில் புத்தக்கடை உரிமையாளர் எனது நண்பர் திரு. டி. டேவிட்சன் அவர்களிடம் கேட்டிருந்தேன். திரு. ஜெகநாதன் சொன்ன

அதே நிபந்தனைகளில் திரு. டேவிட்சன் அவர்களும் சுமார் ரூ. 15,000/- விலை மதிப்புள்ள நூல் நிலைய புத்தகங்களை பெட்டிகளில் அடைத்து ஆய்வுக்குழு வருவதற்கு முந்தின நாள் தமது காரில் அனுப்பித் தந்தார்.

1965 ஜூன் 20ம் தேதி ஆய்வுக்குழு வந்தது. ஐந்து பேரடங்கிய அந்த ஆய்வுக்குழுவுக்கு வ.உ.சி. கல்லூரி முதல்வரும் சென்னை பல்கலைக்கழக சிண்டிக்கேட் மெம்பருமான திரு. ஸ்ரீநிவாசராகவன் அவர்கள் தலைவர், கல்லூரி திறப்பதற்கு செய்யப்பட்டிருந்த முன்னேற்பாடுகள் அனைத்தையும் ஆய்வுக்குழு அங்கத்தினர் பார்வையிட்ட பின்னர் தமது திருப்தியை தெரிவித்தனர். தாம் கல்லூரி திறப்பதற்கு அனுமதி வழங்குமாறு பல்கலைக் கழகத்துக்கு பரிந்துரை செய்யப்போவதாக சொன்னார்கள். ஆனால், கல்லூரி திறப்பதற்கு முன், கல்லூரி நிர்வாகம் மானிய நிதியாக ரூபாய் ஒரு லட்சம் வங்கியில் வைப்பு நிதியாக டிப்பாஸிட் செய்யவேண்டியிருக்கும் என்று கூறி விடைபெற்றுச் சென்றார்கள். குறிப்பாக அதன் தலைவர் சீனிவாசராகவன் அவர்களுக்கும் எமது நன்றி என்றென்றும் உரியது.

கல்லூரி திறப்பதற்கு தேவையான அனைத்தையும் பூர்த்தி செய்தபின் இன்னும் ஒரு லட்சம் தேவையா என்று நான் ஏங்கவில்லை. கல்லூரி திறக்கப்பட்டு, அது லட்சாதிலட்சம் விலை மதிப்புள்ள 60 ஏக்கர் நிலமும், கட்டிடங்களும், தளவாடங்களும், தண்ணீர் வசதிகளும், மாணவர் தங்கும் விடுதிகளும், வாய்ப்புள்ளபோதெல்லாம் பல்லாயிரக்கணக்கில் நன்கொடையாக நிதி வசூல் செய்யத்தக்க செல்வாக்குமுடைய ஒரு பெரிய முதுகலை கல்லூரியாய் விரிவடைந்து ஒழுங்காய் இயங்கிக் கொண்டிருக்கின்ற இன்றைய நிலையில் கல்லூரி நிர்வாகம் ஒரு லட்சமோ, இரு லட்சமோ எளிதாக உண்டாக்கி விடலாம். கல்லூரி திறக்குமுன் ஒரு லட்சம் ரூபாய் உண்டாக்குவது இலகுவான காரியமல்ல.

இவ்வருடம் (1965-66) கல்லூரி திறக்க வேண்டுமாயின் ஒரு மாதத்துக்குள் மான்ய நிதி ரூபாய் ஒரு லட்சம் பட்டிகை பாங்க் ஒன்றில் டிப்பாசிட் செய்ய வேண்டும் என்ற செய்தியைக் கேட்ட கல்லூரி நிர்வாக குழு அங்கத்தினரில் சில லட்சாதிபதிகள் திடுக்கிட்டு நிலைகுலைந்துவிட்டனர். இச்செய்தியை எதிர்பார்த்த நான் மலைக்கவில்லை. அன்று அளவுக்கு மிஞ்சிய விரிவடைந்து இரண்டாக பிளக்கப்படும் தருவாயிலிருந்து சென்னை பல்கலைக்கழகம், நாட்டிலுள்ள உயர்நிலைப்பள்ளிகளில் ஆண்டாண்டுதோறும் கற்றுத்தேறும் பிள்ளைகள் கல்லூரிகளில் சேர்ந்து கற்பதற்கு போதிய இட வசதியில்லா பற்றாக்குறையை நிவிர்த்தி செய்யும் பொருட்டு, நாட்டுப்புறங்களில் புதிய தனியார் கல்லூரிகள் நிறுவப்படுவதை ஊக்குவிக்க வேண்டும் என்ற கொள்கைமுறை உடையதாயிருந்தது. ஆகவே, நாட்டுபுறத்தில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள நமது விவேகானந்தா கல்லூரியை 1965ம் வருடமே திறக்க அனுமதி வழங்கி விட்டு மானிய நிதியை பின்னர் பெற்றுக் கொள்ள பல்கலைக்கழகம் இணங்குமென்று தான் நான் நம்பினேன்.

கல்லூரி திறப்பதற்கு தேவையான நிலங்கள், கட்டிடங்கள், தளவாடங்கள் யாவும் தயாராக்கப்பட்டு விட்டதால், இனி எவ்வாறேனும்

கல்லூரி வந்துவிடும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டாயிற்று. இது நிதி உதவி செய்தவர்களிடமிருந்து மேலும் பணம் பிரிக்க உதவியாயிருந்தது. எனினும் ரூபாய் ஒரு லட்சம் கல்லூரி திறக்கும் முன் திரட்டுவது இயலாத காரியம். ஆகவே, கல்லூரி நிலங்களை ஈடு வைத்து ஏதாவதொரு பட்டிகை பாங்கிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் கடன் வாங்கி அந்த தொகையை அந்த பாங்கிலேயே காலேஜின் மானிய நிதியாக டிப்பாஸிட் செய்துவிட முயன்றேன். நாகர்கோவிலுள்ள பாங்குகளில் இந்தியன் பாங்கும் கனரா பாங்கும் மறுத்துவிட்டன. பின் ஒருநாள் நம்பிக்கையின்றித்தான் இந்தியன் ஓவர்சிஸ் பாங்குக்கு சென்றேன். அந்த வங்கியின் மேலாளர் திரு. ஜான் அவர்களிடம் விசாரித்தேன். விவேகானந்தா எட்யுக்கேஷனல் சொஸைட்டியின் நில உடமை பத்திரங்களை ஈடு வைத்து எமது வங்கியிலிருந்து ரூ. 1,00,000/- (ஒரு லட்சம்) கடன் எடுக்கலாம். ஆனால் சொஸைட்டியின் நிதி அக்கவுண்டுகளும், டிப்பாஸிட்டுகளும் எனது வங்கியிலேயே வைக்கப்பட வேண்டும் என்று திரு. ஜான் அவர்கள் சொன்னார்கள். அந்த நிபந்தனையை ஏற்றுக் கொண்டு கடன் விண்ணப்ப படிவங்களையும் மற்றும் ஆவணங்களையும் சில தினங்களில் முறைப்படி தயார் செய்து அவர்களிடம் கொடுத்தேன்.

கல்லூரி திறப்பதற்கான பல்கலைக்கழக அனுமதி 1965 ஜுலையிலே வந்துவிட்டது. அனுமதி வழங்கிய ஆர்டரில் கல்லூரி திறப்பதற்கு முன் மானிய நிதி ரூபாய் ஒரு இலட்சம் ஒரு பட்டிகை பாங்கில் டிப்பாசிட் செய்யவேண்டுமென்ற நிபந்தனைகளையும் விதிக்கப்பட்டிருந்தது. உடனே, அதுவரை பிரிக்கப்பட்டிருந்த பணத்தில் ரூ. 25,000/- நாகர்கோவில் இந்தியன் ஓவர்சீஸ் பாங்கில் டிப்பாஸிட் செய்துவிட்டு பல்கலைக்கழகத்துக்கு ஒரு கடிதம் வரைந்தேன். கல்லூரி திறப்பதற்கான முன்னேற்பாடுகளை செய்துமுடிப்பதில் பெரும்பாலும் செலவாகி விட்டதால், இந்தக் கட்டத்தில் ஒரு இலட்சம் ரூபாய் உடனடியாக டிப்பாஸிட் செய்வது கஷ்டம். ஆகவே, இப்போது ரூ. 25,000/- நாகர்கோவில் இந்தியன் ஓவர்சீஸ் பாங்கில் டிப்பாஸிட் செய்துள்ளேன். இவ்வருடமே கல்லூரி திறக்க அனுமதி தரவேண்டுமென்று வினயபூர்வம் வேண்டிக்கொண்டேன். தாமதமின்றி பதில் வந்தது. கட்ட வேண்டிய ஒரு லட்சத்தில், கல்லூரி திறக்கும் முன் ரூ. 50,000/- டிப்பாஸிட் செய்யுங்கள். மீதி ரூ. 50,000/- அவ்வருட (1956-66) இறுதிக்குள் கட்டினால் போதுமென்ற கண்டிப்பான பதில் வந்தது. உடனே, சொஸைட்டி பேருக்கு மாற்றிக் கிடைக்கப்பட்டிருந்த ரூ. 10,000/- மதிப்புள்ள அரசு, மின்வாரிய வட்டிக்கடன் பத்திரங்களையும் மானியமாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று திரும்பவும் ஒரு கடிதம் எழுதிவிட்டு, சென்னைக்கு சென்று அந்த ரூ. 10,000/- மதிப்புள்ள பத்திரங்களை பதிவாளரிடம் காண்பித்து பேசிவிட்டு வந்தேன். அவைகளை ஏற்றுக் கொண்டதாக பதில் வந்தது. எனவே, டிப்பாஸிட் வைக்க வேண்டிய ரூ. 50,000/-த்தில் பாக்கி ரூ. 15,000/- மாத்திரம் டிப்பாஸிட செய்ய வேண்டியிருந்தது. இந்த ரூ. 15,000/- டிப்பாஸிட் செய்ய வேண்டிய கடைசி நாளுக்கு முந்தின நாள் நானும்

திரு.ஜி.ஏ. மார்த்தாண்டரும் மற்றும் சகாக்களும் பலரை அணுகி வாக்களித்திருந்த ஏ கிளாஸ் பங்குத் தொகையில் சிறிதளவாவது இந்த வேளை தந்துவிட வேண்டினோம். ஆனால், எங்களால் வாக்களிக்கப்பட்ட பணத்தை பெற இயலவில்லை.

அப்போது விருதுநகரில் கமர்ஸியல் டாக்ஸ் அதிகாரியிருந்த இன்றைய விவேகானந்தா கல்லூரி செயலாளராகிய எனது தம்பி (சித்தப்பா பிள்ளை) திரு. கே. குமாரசாமி, பி.எஸ்ஸி., பி.எல்., அன்றைய தினம் நாகர்கோவிலுக்கு வந்திருந்தார். மானிய நிதி உண்டாக்க நானும் திரு. ஜி.ஏ. மார்த்தாண்டரும் கஷ்டப்படுவதை அறிந்து வந்திருந்தார். அன்று சாயுங்காலம் நாங்கள் மூவரும் பணம் கிடைக்காமல் மனவருத்தத்துடன், நாகர்கோவிலிருந்து கன்னியாகுமரி மோட்டார் பஸ்ஸில் அகஸ்தீஸ்வரத்துக்கு திரும்பி வந்தோம். வந்து கொண்டிருக்கும் போது அவர் சொன்னதாவது "இதுவரை கல்லூரிக்காக நிலமும், நிதியும் தந்து உதவிய நண்பர்கள் நம்மை நம்பித்தான் தந்துள்ளனர், ஆகையால் அவர்களுடைய நம்பிக்கைக்கு பங்கம் வராமல் பார்க்க வேண்டியது. நம்முடைய பொறுப்பு, நாம்தான் மானிய நிதி பாக்கி ரூ. 15,000/- த்தையும் நாளைய தினம் பாங்கில் டிப்பாஸிட் செய்ய வேண்டும் எக்காரணத்தாலும் தவறக்கூடாது"! என்று திரு. கே. குமாரசாமி வலியுறுத்திச் சொன்னார். அவர் சொன்னபடியே, வேறு யாரையும் எதிர்பாராமல், பதினையாயிரம் ரூபாயும் நாங்கள் மூவரும் வீதமாய் எடுத்து அடுத்த நாள் பாங்கில் கட்டிவிட வேண்டும் என்ற முடிவு செய்தோம். அவ்வண்ணமே திரு.ஜி.ஏ. மார்த்தாண்டர் ரூ. 7,000/- திரு. கெ. குமாரசாமி ரூ. 5,000/- நான் ரூ. 3,000/- என்ற விகிதத்தில் ரூ. 15,000/- உண்டுபண்ணி, பல்கலைக்கழகம் விதித்திருந்த கடைசி நாளில் நாகர்கோவில் இந்தியன் ஓவர்சீஸ் பாங்கில் டிப்பாஸிட் செய்து, மானிய நிதியை ரூபாய் ஐம்பதாயிரமாக பூர்த்தி செய்தோம். உடனே அவசர தந்தி மூலம் பல்கலைக்கழக பதிவாளருக்கு அறிவித்தேன். கல்லூரி திறப்பதற்கு அனுமதியும் கிடைத்தது. இறைவருளால் பாறை நினைவுச்சின்ன மண்டபம் பூர்த்தியாவதற்கு முன் 1965 ஆகஸ்ட் 11ம் நாளன்று, நான் நெடுநாளாய் கனவு கண்ட கொண்டிருந்த அகஸ்தீஸ்வரம் விவேகானந்தா கல்லூரி, P.U.C. வகுப்பில் 165 பிள்ளைகளோடு ஆரம்பமாயிற்று.

இக்கல்லூரியை நிறுவிட முக்கிய தேவைகளாகிய நிலமும் நிதியும் தந்துதவியவர்களில் பெரும்பான்மையோர் எமது நெருங்கிய அல்லது சற்று தூரத்து உறவினர்களாகும். விலைமதிப்புமிக்க விஞ்ஞான கருவிகளை கடனாக தந்துதவிய திரு. ஜகநாத்ஸன், நூல் நிலைய புத்தகங்களை கடனாக தந்துதவிய திரு. டி. டேவிட்ஸன், பணம் பெற்றும், பெறாமலும் சமயத்துக்கு கட்டிடங்களை கட்டி பூர்த்தி செய்து உதவிய கொத்தவேலை காண்ட்ராக்டர் திரு.எஸ். இராசய்யா தச்சுவேலை காண்ட்ராக்டர் திரு. யோவான், ஃபர்னிச்சர் காண்ட்ராக்டர் திரு. சார்லஸ், மானிய நிதி கட்டுவதற்கு நாகர்கோவில் I.O.B. யில் ஒரு இலட்சம் ரூபாய் கடன் வாங்குவதற்கு பேருதவியாயிருந்த அந்த வங்கியின் மானேஜர் திரு. ஜான்

ஆகிய அனைவரும் கிறிஸ்தவ நண்பர்களாகும். இவர்கள் அனைவருக்கும் எமது நன்றி. குறிப்பாக என்னுடைய நன்றி என்றென்றும் உரியது.

மேற்கூறியவற்றிலிருந்து இக்கல்லூரி தோன்றுவதற்கு, யார் யார் எவ்வெவ்வளவு உதவியுள்ளனர் என்பது தெரியவரும், கட்டிடம் கட்ட ஆரம்பிப்பதற்கு முன், யாரிடமிருந்தும் காசு வாங்காமல், அதுவரை சுமார் ரூ. 10,000/- என்னுடைய கைப்பணமாக நானே செலவு செய்தது, எனது முயற்சிக்கு ஏனையோரின் ஆதரவை திரட்ட நல்ல ஏதுவாயிற்று, நானும் திரு. ஜி.ஏ. மார்த்தாண்டரும், திரு. கோ. குமாரசாமியும் கூடி பல்கலைக்கழகம் விதித்திருந்த கடைசி நாளன்று ரூ. 15,000/- பாங்கில் டிப்பாஸிட் செய்ததால் கல்வி ஆண்டு 1965-66 கல்லூரி திறக்க முடிந்தது.

எடுத்த நற்கருமத்தை இனிது நிறைவேற்றிட துணிந்து செயலாற்றும் கருமயோகிகள் என்ன கஷ்டங்கள் நேரிட்டாலும் பொருட்படுத்த மாட்டனர் அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத்தை ஸ்தாபித்த ஸர் ஸையத் அஹமத்கான் பொருளுதவியை நாடி ஒரு முஸ்லீம் தனவந்தரிடம் சென்றபோது, இவருடைய சமூக சீர்திருத்த கொள்கைகளை பிடிக்காத அந்த தன்வந்தர் பொருளுதவ மறுத்தது மாத்திரமல்ல. தமது காலணி ஒன்றை கழற்றி அதை ஸர் அஹமத்கான் முன்னே வீசினாராம். ஸர் அஹமத்கான் அதை கையில் எடுத்துக் கொண்டு அடுத்த காலணியையும் தந்து உதவுமாறு அந்த பிரபுவிடம் கேட்டாரம். எனக்கும் இதுபோன்ற சம்பவங்கள் நடந்ததுண்டு.

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணா யினார்.

என்ற ஆன்றோர் வாக்குக்கு இணங்க, கல்லூரி பித்தன் என்ற வசைமாரியையும் பொருட்படுத்தாது, நேர்மை குன்றாது, துணிச்சலுடன் செயலாற்றி வெற்றி கண்டேன். துணிந்தவருக்கே வெற்றி இக்கல்லூரி ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும். கல்லூரி நிறுவும் முயற்சியில் ஆரம்பம் முதல் எப்போதும் எனக்கு உறுதுணையாயிருந்து உதவியர் திரு.ஜி.எ. மார்த்தாண்டர் ஆவார்.

1965 ஆகஸ்டில் கல்லூரி திறக்கப்பட்டவுடன் அதற்கு ஆதரவு பெருகலாயிற்று, அரைமனதுடன் உதவியர்கள் முழுமனதுடன் உதவ முற்பட்டனர். ஆசிரியர்களும், மாணவர்களும் மனமுவந்து கல்லூரி நிதிக்கு நன்கொடைகள் வழங்கினர்.

கல்லூரிக்கு அனுமதி கிடைத்த சில தினங்களில், பேராசிரியர் கமலாபதி என்ற ஒருவரை கல்லூரி முதல்வராக நியமனம் செய்ய விரும்பினார் தலைவர் டாக்டர் பத்மனாபன். ஆனால், நிர்வாகக்குழு கூடி பேராசிரியர் திரு.வி.வெங்கடசுப்பையா அவர்களை கல்லூரி

முதல்வராகவும், மற்றும் பலரை ஆசிரியர்களாகவும் ஆபீஸ் சிப்பந்திகளாகவும் நியமனம் செய்தது.

கல்லூரி திறக்கப்பட்ட பின், இந்தியன் ஓவர்சீஸ் பாங்கில் அபேட்சித்திருந்த கடன்தொகை ரூபாய் ஒரு இலட்சமும் கிட்டியது. உடனே, மானிய நிதி பாக்கி ரூ. 50,000/- கட்டி ஒரு லட்சம் பூர்த்தி செய்யப்பட்டது.

அடுத்த வருடம் (1966-67) சென்னை பல்கலைக்கழகம் இரண்டாக்கப்பட்டு, மதுரை பல்கலைக்கழகம் தோன்றியது. இக் கல்லூரியும், தெற்கு மாவட்டங்களிலுள்ள இதர கல்லூரிகள் அனைத்தும் மதுரை பல்கலைக் கழகத்தின் அதிகாரத்துக்கு உள்ளாயி. இவ்வருடம் பி.ஏ. வகுப்பில் பொருளாதாரமும், தமிழும் பி.எஸ்.ஸி., வகுப்பில் கணிதமும் ஆரம்பிக்க மதுரை பல்கலைக்கழகம் அனுமதி வழங்கியது.

தான் விரும்பியபடி கல்லூரி நிர்வாக குழு செயல்படவில்லை என்றெண்ணி டாக்டர். பத்மனாபன் தமது தலைவர் பதவியை ராஜினாமா செய்துவிட்டார். ஆகவே, அப்போது துணைச் செயலாளராயிருந்த திரு.எஸ்.கே.பாண்டியன் அவர்களை டாக்டர். பத்மனாபன் அவர்களுடைய இடத்தில் தற்காலிக தலைவராக நியமிக்க செயற்குழுவில் பிரேரணை செய்தேன். செயற்குழுவும் அவ்வண்ணமே தீர்மானித்தது.

வருடந்தோறும் புதிய வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு கல்லூரியானது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டிருந்தது. 1967 ஜூனில் பி.ஏ. வகுப்பில் ஆங்கில இலக்கிய பாடமும், 1968 ஜூனில் பி.எஸ்.ஸி., வகுப்பில் இராசயன பாடமும் ஆரம்பிக்கப்பட்டன.

திரு. எஸ்.கே. பாண்டியன் அவருடைய தம்பி கண்ணப்பன், ஆகிய இருவரும் கூடி கல்லூரி கட்டிடத்திற்கு ரூ.15,000/- நன்கொடை வழங்கினர். அதை பயன்படுத்தி, சொஸைட்டி நிதியிலிருந்து மேலும், ரூ.14,000/- செலவு செய்து விலங்கியல் பாடம் கற்பிக்கத் தேவையான ஒரு கட்டிடம் கட்டினோம். 1969ல் பி.எஸ்.ஸி. வகுப்பில் விலங்கியல் பாடம் கற்பிக்க பல்கலைக்கழகம் அனுமதி வழங்கியது.

ஆசிரியர்களும் மாணவர்களும் ஆண்டுதோறும் வழங்கிக் கொண்டிருந்த நன்கொடை நிதியைக் கொண்டு கட்டப்பட்ட கல்லூரியில் பிரதான கட்டிடத்தில் கல்லூரி ஸ்தாபகர் எஸ்.டி. பாண்டிய நாடார் கட்டிடம், என்று எழுதப்பட்ட அடிக்கல் ஒன்று 11.02.1970ல் வைக்கப்பட்டது.

ஹாஸ்டல் ஒன்று கட்டுவதற்கு நாகர்கோவில் ஆறுமுக தங்கமளிகை அதிகர் திரு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் ரூ. 5,000/- நன்கொடை வழங்கினார். அதோடு சொஸைட்டி பணம் ரூ. 20,000/- செலவு செய்து அப்பெரியாருடைய பெயரில் ஒரு ஹாஸ்டல் கட்டப்பட்டது.

இன்னொரு ஹாஸ்டல் கட்டுவதற்காக, மற்றனைவரைவிடவும் அதிகமான நன்கொடை ரூ. 18,000/- தந்து உதவினார் அளத்தங்கரை திரு.

எஸ். இரத்தினசாமி நாடார் அதை பயன்படுத்தி அதோடு மேலும் ரூ.12,000/- செலவு செய்து அன்னாருடைய பெயரில் ஒரு ஹாஸ்டல் கட்டப்பட்டுள்ளது.

கல்லூரி திறந்த அடுத்த ஆண்டில் (1966-67) கல்லூரியில் பெண்களையும் சேர்த்துக் கொள்ள பல்கலைக்கழகத்தின் அனுமதி கோரினேன். பல்கலைக்கழகம் விடாப்படியாய் அனுமதி வழங்க மறுத்தது. எனவே, இக்கல்லூரிக்கு சுமார் ஆறு ஃபர்லாங் தூரத்துக்கு கிழக்கே சபரிகொத்தளம் பக்கத்தில் பெண்களுக்கென்று ஒரு தனி கல்லூரி அமைத்திட ஆவன செய்தேன். பல்கலைக்கழகத்துக்கு அபேட்சை அனுப்பப் போகிற கட்டத்தில் சில நிபந்தனைகளோடு விவேகானந்தா கல்லூரியில் பெண்களையும் சேர்த்துக் கொள்ள அனுமதி கிடைத்தது. ஆகவே, பெண்களுக்கென்று தனிக்கல்லூரி நிறுவும் எண்ணத்தை விட்டுவிட்டேன்.

கல்லூரியின் முதலாவது செயற்குழுவின் பதவிக்காலம் முடிவதற்குள் உபதலைவர் பதவிகளை வகித்து வந்த திரு. சிவராமகிருஷ்ண ஐயரும், திரு.ஏ. பூதலிங்க பணிக்கரும் காலமாகி விட்டனர். 1969ல் செயற்குழுவின் பதவிக்காலம் முடிந்தவுடன் புதிய செயற்குழு தேர்வு செய்யப்பட்டது. இந்தக் குழுவிலும் நான் செயலாளராய் தேர்வு செய்யப்பட்டு தொடர்ந்து பணிபுரிந்தேன்.

கல்லூரியின் முதலாவது முதல்வர், திரு.வி.வெங்கடசுப்பையா திர் வயது எய்தி 1972ல் ஓய்வு பெற்றார். அவருடைய இடத்தில் முதல்வராக நியமனம் பெற்று கணித பேராசிரியர் திரு. எல்.வி. சுப்பிரமணிய ஐயரும் ஒரு வருடத்தில் ஓய்வு பெற்றுவிட்டார். பின்னர் திரு. என். பாலசுப்பிரமணியன் தற்காலிக முதல்வராக நியமிக்கப்பட்டார்.

இவ்வாறிருக்கையில், 1976 செப்டம்பர் 6ம் தேதி நான் உலாவச் சென்ற போது தற்செயலாய் எனது வலது கால் முறிவுற்றது. உடனே நான் நாகர்கோவில் பிரபல டாக்டர் ஜெயசேகரன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு அங்கு அருமையாக பேணப்பட்டேன். இதை அறிந்து, சென்னையில் நாகமணி நர்ஸிங் ஹோம் என்ற பிரபல மருத்துவமனை உரிமையாளராகிய எனது மூத்தண்ணா மகன் டாக்டர் குமாரசாமியும், எனது மகன் D.D.O. நடராஜனும் சென்னையிலிருந்து 12.9.1976ல் என்னை பார்க்க வந்திருந்தனர். டாக்டர் குமாரசாமி டாக்டர் ஜெயசேகரிடம் பேசி அங்கிருந்து என்னை விடுவித்து, அன்றைய தினமே என்னை சென்னைக்கு கொண்டு சென்று தம்முடைய நர்ஸிங் ஹோமில் சேர்த்தார். அங்கே எலும்பு அறுவை சிகிச்சையில் புகழ்பெற்ற நிபுணர் டாக்டர் எம். நடராஜன் அவர்களால் எனக்கு நவீன முறையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. நான்கு மாதங்கள் படுக்கையில் இருந்த என்னை டாக்டர் குமாரசாமியும் அவருடைய் அருமைபத்தினி டாக்டர். ஞானசௌந்தரியும், நாகமணி மருத்துவமனையில் அன்பு தாதியரும் அல்லது பகலும் அயராது பேணி பரிபாலித்தனர். அதன் பயனாய் நான் பூரண குணமடைந்து 12.03.1977ல் அகஸ்தீஸவரத்துக்கு திரும்பி வந்தேன். என்னைப் பேணின

டாக்டர்களுக்கும் தாதியருக்கும் என் மனமார்ந்த நன்றி என்றென்றும் உரியது.

நாகமணி நர்சிங் ஹோமில் படுக்கையில் இருக்க நேரிட்டது. என்னுடைய நன்மைக்காக இறைவன் அருளிய அரிய சந்தர்ப்பம் என்றெண்ணி கல்லூரி நிர்வாக பொறுப்பிலிருந்து ராஜினாமா செய்துவிட்டு மன நிம்மதி அடைந்தேன். என்னுடைய இடத்தில் தேர்வு செய்யப்பட்ட இன்றைய கல்லூரி நிர்வாகஸ்தர் திரு.கே. குமாரசாமி அவர்களுடைய நிர்வாகத்தில் இக்கல்லூரி முதுகலை கல்லூரியாக வளர்ந்துவிட்டது.

சுமார் 60 ஏக்கர் விஸ்தீரணமுள்ள கல்லூரி வளாகத்தை மேலும் விரிவாக்கக் கூடிய காலி நிலங்கள் ஏராளம் பக்கத்தில் உள்ளன. இப்போது கல்லூரியின் மானிய நிதி ரூ.10 லட்சமாக உயர்ந்துள்ளது. வருங்காலத்தில் இக்கல்லூரி விவேகானந்தா தங்கற் பல்கலைகக்கழகமாக உருவெடுத்து, பாரத புண்ணிய பூமியின் தென்கோடியில், தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஓர் ஒப்பரிய சின்னமாய் விளங்குமென்று நம்புகிறேன்.

செயற்குழுவிலிருந்து நான் ராஜினாமா செய்த போது எனக்கு வயது (77) எழுபத்தேழு. அப்போதுதான் நான் உண்மையான ஓய்வுபெற்று படுக்கையில் இருந்தேன். இப்போது இந்நூலை எழுதியுள்ளேன் இறப்பது வரை ஏதாவது நல்லது செய்து கொண்டிருக்க வேண்டுமென்பதே எனது அவா. அது ஆண்டவனருளால் நிறைவேறிக் கொண்டிருக்கின்றது.

எனது சுயசரிதை சம்பந்தப்பட்ட ஒரு சில விஷயங்களை மாத்திரம் சுருக்கமாக எழுதினேன். எனினும் நீண்டுவிட்டது. தவறுகள் கண்டால் மன்னிக்கவும்.

இடம் அகஸ்தீஸ்வரம்

தேதி 16.11.1987 ஆசிரியர்

ஆறுமுகப் பெருமாள் நாடார்

(1909 - 1983)

– அ.க. பெருமாள்

சுமார் 26-28 வருஷங்களுக்கு முன்பு நாகர்கோவில் மணிமேடை ஜங்ஷன் அருகே இருந்த ஒரு புத்தகக் கடையில் ஆறுமுகப் பெருமாள் நாடாரைப் பார்த்தேன். நல்ல உயரம், கறுப்பு நிறம், தும்பைப் பூவாய் நரைத்த தலை, தழையத்தழைய பாதம் வரை கிடந்த வேட்டி, தலையில் கசவு நேரீது தலைப்பாகை, சட்டையில்லாத வெற்றுடம்பு, மார்பிலே நிறைய நரைத்த முடிகள் கடைக்காரரிடம் கணீரென்ற குரலில் பேசிக்கொண்டிருந்தார். சுத்தமான உச்சரிப்பில் நாஞ்சில் நாட்டுக்கே உரிய நையாண்டித்தனத்தோடு பேசினார்.

அவர் அன்று பெருந்தலைவர் காமராசரைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தார். காமராசரைப் பற்றி அவர் அப்போது வெளியிட்ட சிறு பிரசுரத்தை விற்பனைக்காகக் கொடுக்க வந்திருந்தார். கடைக்காரர் என்னை அவருக்கு அறிமுகப்படுத்தினார். நான் அப்போது வில்லிசை கதைப்பாடல் ஏடுகளைத் தேடிக்கொண்டிருந்த சமயம் ஆறுமுகப் பெருமாள் நாடாரைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரது வீட்டிற்கு இடையன்விளை ராஜமார்த்தாண்டனுடன் இரண்டு மூன்று தடவை அலைந்துவிட்டு ஏமாந்து திரும்பியதைச் சொன்னேன். அப்போது அவரைச் சந்தித்த பிறகு பலமுறை அவரது வீட்டிற்குச் சென்றேன், என்னைத் தேடியும் அவர் வந்திருக்கிறார். அவருக்கும் எனக்கும் இருந்த நாற்பது வருஷ இடைவெளியைத் தாண்டியே நாங்கள் பழகினோம். அவர் அலுப்பில்லாமல் கதை சொல்லுவார், வில்லிசை ஏடுகளைத் தேடிச்சென்ற அனுபவங்களை அவரே ரசித்துச் சொல்லுவார்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அகஸ்தீஸ்வரத்திற்கு வரலாற்று ரீதியான மரியாதை உண்டு. பிற்காலப் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்ட ஒரு சிவன் கோவில் அந்த ஊரின் பழமையைக் கூறுகிறது.

இந்த ஊருக்கு முக்கியமாக இன்னொரு சிறப்பு உண்டு. 17ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் ஏற்பட்ட ஒரு கலவரத்தால் பாதிக்கப்பட்ட நாடார்கள் இந்த ஊருக்கு வந்து குடியேறியதுதான், சோழநாட்டில் காவிரிக்குக் கரை அடைக்க மறுத்த தண்டனைக்கு உள்ளான பத்திர காளியின் புத்திரர்களான வலங்கை நாடார்தான் இந்த ஊரிலும், இதை அடுத்த ஊர்களிலும் குடியேறினர் என்பது கர்ணப் பரம்பரைக் கதை சோழ அரசனால் தண்டனை பெற்ற ஒருவன் இலங்கை சென்று அங்கே கோட்டைக் கட்டிப் பெரும் செல்வந்தனாய் வாழ்ந்தான். பின்னர் சில காரணங்களால் ஆங்கில அதிகாரி ஒருவனால் ஒதுக்கப்பட்டு தன் செல்வங்களுடன் கப்பலில் கிளம்பி வந்து அகஸ்தீஸ்வரம் அருகே குடியேறினான் என்பது வலங்கை புராணம் கூறும் செய்தி. இந்தக் கால கட்டங்களில் அகஸ்தீஸ்வரம் ஊரை அடுத்த இடங்கள் பாண்டி நாட்டுடன் இருந்தன. அங்கே குடியேறிய வலங்கைத் தலைவன் வெங்கல ராஜனைப் பற்றிய கதைகளை இன்றும் இந்த ஊரில் கேட்கலாம்.

இப்படியாகச் சோழநாட்டிலிருந்து பாண்டி நாட்டிற்கு வந்து, அங்கிருந்து நாஞ்சில் நாட்டின் எல்லையில் குடியேறிய வலங்கை மக்களாகிய நாடார்கள் கடின உழைப்பாளிகளாயிருந்தனர். இந்த

வம்சத்தில் ஆறுமுகப் பெருமாள் நாடார் (1840-1909) என்பவர் இருந்தார். இவரது மகன் குமாரசாமி நாடார் (1877-1958) கொஞ்சம் படிப்பறிவுள்ளவர். தென்பாண்டியிலிருந்து நாஞ்சில் நாட்டிற்கு நாடார்கள் குடியேறி வந்த கதைகளை நிறையவே இவர் தெரிந்து வைத்திருக்கிறார். இவர் நல்ல உழைப்பாளியும் கூட இவருக்கு நிறையத் தோப்புகளும் வயல்களும் இருந்தன. தோப்பு நாடார் என்ற முத்திரையுடன் இவர் வாழ்த்து வந்தார். கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில் கணக்கு எழுதுவதற்குரிய பனை ஓலைகளை இலவசமாகவே இவர் கொடுத்திருக்கிறார். இவரது ஒரே மகன்தான் கு.ஆறுமுகப் பெருமாள் நாடார் (1909-1983)

ஆறுமுகப் பெருமாள் நாடார் அடிக்கடி சொல்வார் "நான் ஸ்ரீ மூலம் திருநாள் மகாராஜா, சேதுலட்சுமிபாய் சித்திரைத் திருநாள் என்ற பெரிய மன்னர்காலத்தில் வாழ்ந்தவன், முடிசூடா மன்னன் காமராஜர் ஆட்சியையும் பார்த்திருக்கிறேன் என்று. இவர் ஐந்து அல்லது ஆறாவது வகுப்புவரைதான் படித்திருக்கிறார். அதுவும் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் நல்ல வசதியுள்ள குடும்பம், ஒரே மகன், அதனால் பக்கத்து ஊரில் மகனைப் படிக்க வைக்க தந்தைக்கு விருப்பமில்லை. அப்போது (1926-1928) உன்னங்குளம் என்ற ஊரிலிருந்து பிரபல வைத்தியர் ஒருவர் அகஸ்தீஸ்வரத்திற்கு அடிக்கடி வருவார். குமாரசாமி நாடார் விட்டுத் திண்ணையில் தன் மருந்துக்கடையைப் பரப்பி வைத்துக் கொண்டிருப்பார். நோயாளிகள் அவரைத் தேடிவருவார்கள். இளைஞனான ஆறுமுகப் பெருமாள் அவருக்கு உதவியாக இருப்பார்.

ஆறுமகப் பெருமாள் நாடார் உன்னங்குளம் வைத்தியரிடம், அவரது நேரடிப்பார்வையில் வைத்தியம் கற்றிருக்கிறார். வைத்திய ஏடுகளைப் படிப்பதில் அவருக்கு இருந்த நாட்டம் பிற்காலத்தில் அவரைத் திசை திருப்பி இருக்கிறது. அகஸ்தீஸ்வரத்தில் இன்னும் அவர் வைத்தியராகவே அடையாளங் காணப்படுகிறார். அவர் ஆரம்பத்தில் வைத்தியத் தொழில்தான் செய்துவந்தார். வீட்டிலேயே மருந்துகள் தயாரித்து வியாபாரம் செய்தார். வைத்திய ஏடுகளைச் சேகரிப்பதிலேயே இவரது ஆரம்பகால வாழ்க்கை கழிந்திருக்கிறது. ஏடுகளை பிரதி செய்து வைத்தியர்களுக்கு விற்பனை செய்வதிலும் வருமானம் வருவதைக் கண்ட பிறகுதான் வில்லிசை ஏடுகளைத் தொகுக்க ஆரம்பித்திருக்கிறார்.

1940-45களில் இவர் வில்லிசை ஏடுகளைச் சேகரிப்பதில் முழுமூச்சாய் இறங்கியிருக்கிறார். அபூர்வமான ஏடுகளை ஏட்டிலேயே பிரதி செய்து கொள்வது இவரது வழக்கம். இந்தக் கால கட்டத்தில், தென் திருவிதாங்கூரில் புனலூர் பேப்பரும், கடுக்காய் மையும் எளிதாகக் கிடைத்தன. என்றாலும், இவர் பனை ஓலைகளில் பிரதி செய்வதை மிகவும் விரும்பியிருக்கிறார்.

அறுமுகப்பெருமாள் நாடாருக்கு வட்டார வரலாற்றிலும், சாதி குறித்த செய்திகளைச் சேகரிப்பதிலும் இயல்பான ஈடுபாடு உண்டு. தன் சாதி தொடர்பான பழைய செய்திகளை நிறையவே சேகரித்தார். நாஞ்சில்நாட்டு நாடார்களின் குடிப்பெயர்ச்சி, அவர்களின் வாழ்க்கை முறை, அவர்களுக்கும் திருவிதாங்கூர் அரசர்களுக்கும் உள்ள உறவு பற்றித் தெரிந்து வைத்திருந்தார். அவருக்கு, திருவிதாங்கூர் வரலாற்றில் சந்தேகம் வந்தால் பொத்தையடி (க.கு. மாவட்டம்) ஏ.ஆர். நாடாரைப் பார்க்கப் போவார்.

ஏ.ஆர். நாடார், ஆறுமுகப்பெருமாள் நாடாரைவிட ஒன்றிரண்டு வயது மூத்தவர், கொல்லத்தில் ஒரு தொழில் நிறுவனத்தில் ஆடிட்டராக

வேலை பார்த்தவர், ஆங்கிலமும் மலையாளமும் அறிந்தவர். திருவிதாங்கூர் வரலாறு தொடர்பாக ஆங்கில மலையாளப் புத்தகங்கள் இவரிடம் நிறையவே இருந்தன. நான் இவரைச் சந்தித்தபோது (1983) முதல் முதலில் மலையாளத்தில் வந்த திருவதாங்கூர் சரித்திரப் புத்தகத்தை (1858) காட்டினார். இவரும் பழைய ஓலைச்சுவடிகளையும், கையெழுத்துப் பிரதிகளையும் வைத்திருந்தார். ஆறுமுகப்பெருமாள் நாடார், பல சந்தேகங்களை இவரிடம் தெளிவு படுத்திக் கொண்டுள்ளனார்.

ஒருமுறை நான் ஆறுமுகப் பெருமாள் நாடாரைப் பார்க்கப்போனபோது சென்னை ரத்தினநாயகர் சன்ஸ் வெளியிட்ட பதார்த்த குணசிந்தாமணியைப் படித்துக் கொண்டிருந்தார். நான் அதைப் பற்றிப் பொதுவாகப் பேசிக்கொண்டிருந்தபோது, திடுதிப்பென்று வீட்டிற்குள் போனார். உதிரியான ஏடுகள் சிலவற்றைக் கொண்டு வந்தார். எல்லாம் ஒழுங்கில்லாத ஏடுகள், அழுக்கடைந்தவை அவை பதனீரின் குணங்களைப் பற்றிய நூல் என்றார். அது முழுதும் கிடைக்கவில்லை. கிடைத்தவற்றை மட்டும் தொகுத்திருக்கிறார். அவரே அதற்குப் பதனீர் குணசிந்தாமணி எனப் பெயரிட்டிருக்கிறார். உன்னங்குளம் வைத்தியரின் வீட்டில் அது கிடைத்ததாகச் சொன்னார்.

அந்த நூல் வெங்கலராசன் கதையின் ஒரு நிகழ்ச்சியிலிருந்து ஆரம்பிக்கிறது. பத்திரகாளியின் புத்திரர்களான வலங்கையர், ஒரு காட்டினுள் சென்றபோது தண்ணீர் குடிக்க ஒரு சிறிய குளத்திற்குச் சென்றனர். வலங்கையர் நீர் அருந்த வருகிறார்கள் என்பதைப் பார்த்த ஒரு பிராமணனும், பிராமணத்தியும் அந்தக் குளத்து நீரைக் கலக்கிவிட்டனர். இதனால், நீர்குடிக்க முடியாமல் போன வலங்கையர் இந்த நிகழ்ச்சியைப் பத்திரகாளியிடம் வருத்தத்துடன் முறையிட்டனர். காளி அந்தப் பிராமணனையும் பிராமணத்தியையும் பிடித்து தலைகீழாக நட்டுவிடுங்கள் என்றாள். வலங்கையரும் அப்படியே செய்தனர். உடனே அவர்கள் இருவரும் ஆண்பனையும், பெண்பனையுமாக மாறினர். இந்த நிகழ்ச்சியிலிருந்து பதனீர் குண சிந்தாமணி ஆரம்பிக்கிறது.

நாஞ்சில் நாட்டில், தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் பலருக்குப் பதனீர் முக்கிய உணவாக இருந்ததை அந்த ஏடு விலாவாரியாகக் கூறியது பதனீரைப் பதப்படுத்தி எப்படிப் பாதுகாக்கலாம். பதனீர்ல் சிறுபயிறு சேர்த்து பதப்படுத்துவது எப்படி என்ற பல செய்திகள் அதில் இருப்பதாகக் கூறினார். இந்த ஏட்டின் உதிரி ஓலைகளைத் தஞ்சாவூரிலிருந்து ஒரு பேராசிரியர் 1989ல் விலைக்கு வாங்கிச் சென்றதாகப் பிறகு அறிந்தேன்.

நான் இந்த ஏட்டைப் பார்த்துக் கொண்டிருந்தபோது ஆறுமுகப் பெருமாள் நாடார் பைபிளின் பிரதி தன்னிடம் இருப்பதாகக் கண்ணைச் சிமிட்டிக் கொண்டே சொன்னார். அதன் முக்கியத்துவத்தை அவர் எப்படியோ அறிந்திருக்கிறார். (ஏ.ஆர்.நாடார் அதைப் பற்றி அவரிடம் சொன்னதாகப் பிறகு அறிந்தேன்) நாகர்கோவில் புராட்டஸ்டென்ஸ் சமயப் பணிபுரிந்த (1818-1856) ரெவரன்ற் மீட் என்பவர், லண்டனில் நடந்த சமயப்பயிற்சிக் கூட்டத்தில் (1837) கன்னியாகுமரி மாவட்டம் பெண் ஒருத்தி பைபிளின் ஓலைப் பிரதியை வைத்திருந்ததாகவும், அதைத் தனக்குத் தந்தாகவும் கூறினார். அந்தக் கூட்டத்தின் அந்த பைபிள் பிரதியையும் காட்டியிருக்கிறார். இந்தப்பிரதியைப் பெற்றதை சி.எம்.ஆகூர் தன் The church history of Travancore என்ற நூல்கள் அதிசயமாகக் கூறுகிறார்.

நான் ஆறுமுகப் பெருமாள் நாடாரிடம் இந்த விஷயத்தைச் சொன்னபோது, இதுவா இங்கே கொஞ்சம் அலஞ்சா பத்து பிரதிகளுக்குமேல் கிடைக்குமே என்றார். நான் இந்தப் பிரதியைப் புன்னார்குளம் வள்ளுவப்பண்டார வைத்தியர் ஒருத்தரிடமிருந்துதான் வாங்கி வந்தேன். பின்னர் இந்த ஏடு பற்றி நான் விசாரித்தபோது (1990) ஒரு வெள்ளைக்காரனுக்கு அதைக் கொடுத்துவிட்டதாகத் தகவல் கிடைத்தது. இந்த வெள்ளைக்காரன் பெரும்பாலும் ஸ்டுவேர்டு பிளாக் பேர்னாக இருக்கலாம்.

ஆறுமுகப்பெருமாள் நாடார் 1952லிருந்து 1979 வரை பதிப்பு வேலையில் மும்முரமாகக் காலத்தைக் கழித்திருக்கிறார். இவர் 18 வில்லிசைப் பாடல்களைப் பதிப்பித்திருக்கிறார். இவற்றில் 7 பாடல்கள் மறுபதிப்பு பெற்றுள்ளன. இவர் 21 சிறு பிரசுரங்களையும் வெளியிட்டுள்ளார்.

தமிழகத்தில் இன்று கிடைக்கின்ற கதைப் பாடல்களில் பெரும்பாலானவை தென் மாவட்டங்களில்தான் கண்டெடுக்கப்பட்டவை. இவை 600 அளவில் இருக்கலாம். இங்கு கதைப்பாடல்கள் என்றன, நிகழ்த்து கலைக்கு உரியன மட்டுமல்லாமல் படிப்பதற்கும் உரியதாக விளங்கியவையும் ஆகும். இந்தக் கதைப் பாடல்களில் (அல்லியரசாணிமாலை முதலியவை) மதுரையைப் பின்னணியாக வைத்த பல பாடல்கள் 19 ஆம் நூற்றாண்டில் அச்சில் வந்தன. பெரிய எழுத்தில் வந்த இப்பதிப்புகளில் அச்சுப்பிழைகள் அதிகமிருக்கும் இவை முழுக்கவும் கிராமத்து வாசகர்களை முன்னிறுத்திப் பதிப்பிக்கப்பட்டவை. இந்தக் கதைப்பாடல்கள் அல்லாமல் நிகழ்த்து கலைகளுக்கென்றே உள்ள பாடல்கள் 20ஆம் நூற்றாண்டு ஆரம்பம் வரை அச்சிடுவதற்கு யாரும் முன்வரவில்லை.

நிகழ்த்துக் கலைகளில் வில்லிசை என்ற கலைக்குரிய பாடல்களைப் பலரும் தொகுத்திருக்கின்றனர். மகாகவி உள்ளூர் பரமேஸ்வர அய்யர், கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாபபுரத்தில் நீதிபதியாக இருந்தபோது மலையாள லிபியில் இருந்த தமிழ் கதைப் பாடல்களைத் தொகுத்திருக்கிறார். இவரின் உதவியுடன் இராமாநுஜம் என்பவர் நீலி கதையைத் தேடி எடுத்து ஆங்கில முகவுரையுடன் பதிப்பித்திருக்கிறார். அதற்குப்பின் இந்தச் சிரமத்தை ஆறுமுகப்பெருமாள் தான் எடுத்திருக்கிறார்.

தமிழகத்து நிகழ்த்துக் கலைகளில் வில்லிசைக்கலை தென்மாவட்டங்களில் பரவலாக நிகழ்வது. இதற்குரிய பாடுபொருள் கதைகளை ஏட்டைப் படித்து நிகழ்த்துவது என்ற வழக்கம் 1970 வரை இருந்திருக்கிறது. 1950க்கு முன்வரை விழா நிகழும் கோவிலுக்கு உரிய கதை ஏடுகளைப் பார்த்து ஒருவர்சொல்ல வில்லிசைப் புலவர் விளக்கம்கூறுவது என்பது நடைமுறையில் இருந்தது. இப்படிப் பாடும் வலம்பாடிகளுக்ககாக வில்லிசை கதைகளைப் பதிப்பிக்கும் வழக்கம்1923இல் ஆரம்பித்துவிட்டது. இன்றுவரை 80 நூற்களுக்கு மேல் வெளியாகிவிட்டன.

வில்லிசைக் கதைகளை ஆரம்பத்தில் அச்சில் கொண்டு வந்தவர்களில் மு. ஆறுமுகநாடார், ராஜா தம்பையா நாடார், சீனிவாச நாடார், பிச்சாண்டி நாடார், மு. பெருமாள் நாடார், முத்தையா பிள்ளை, பாலசுப்பிரமணி நாடார் ஆகியோர் முக்கியமானவர்கள். இதற்கு நூற்களை வெளியிட்ட பதிப்பகங்களில் சங்கு கணேசனின் (குமரி அனந்தனின்

மாமனார்) சங்கு நூலகம் குறிப்பிடத்தகுந்தது. இந்த நூலகம் 1950-60களில் வில்லிசைப்பாடல்களைப் பதிப்பித்தவர்களுக்குக் காப்புரிமை கொடுத்திருக்கிறது. இத்தகைய பதிப்புகளைக் கலைஞர்களின் பதிப்பு எனப் பொதுவாகக் கூறலாம்.

வில்லிசைக் கலைஞர்களுக்காகவே பதிப்பித்த நூற்களில் ஆறுமுகப் பெருமாள் நாடார் வித்தியாசமாகச் செயல்பட்டவர். அன்று வெளியான கலைஞர்களுக்கான பதிப்புகளில் பெரும்பாலானவை வியாபார ரீதியாக வந்தவை. ஆறுமுகப் பெருமாள் நாடார் அடிப்படையில் வியாபாரி அல்லர்.

இவர் வில்லிசைக் கலையின் ராக தாளங்களை நன்கு அறிந்தவர். அந்தக் காலத்தில் வாழ்ந்த பெரும்பாலான கிராம மக்களைப் போலவே வில்லிசை நிகழ்ச்சிகளைப் பார்த்து கேட்டு அறிந்தவர்தான். 1940-50களில் வில்லிசைப் புலவர்கள் ஏட்டுவடிவில் இருக்கும். கதைகளைப் படித்துப்புரியமுடியாமல் ஆறுமுகப் பெருமாள் நாடாரிடம், வருவதுண்டு, முக்கியமாக வில்லிசை வலம்பாடிகளின் (மூலக்கதைகளைப் படிப்பவர்) அறிவுறுத்துவராகத்தான் ஆரம்பத்தில் இருந்தார். அப்போது இவருக்கு பட்டினத்தார். தாயுமானவர் ஆகியோரின் மீது ஈடுபாடு அதிகம். வில்லிசைக் கலைஞர்களின் படி ஏட்டிலிருந்த கதைகளைப் பதிப்பித்தார். 1952ல் வெளியான சுடலைமாடன் கதை விற்பாட்டு முன்னுரையில் (ஜெயஜோதி அச்சகம், ராதாபுரம்) "ஆறுமுகப் பெருமாள் நாடார் ஆகிய என்னை வில்லைசைப்புலவர்கள் மிகவும் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஏடுகளைப் படித்துப் புரிந்து கொள்ள முடியாத பெண்புலவர்களுக்காகவும் இதைப் பதிப்பித்தேன்'' என்கிறார்.

இவர் ஏடுகளைப் பதிப்பிக்க ஆரம்பித்த காலத்தில் சேகரிக்க ஆரம்பித்த காலத்தில் (1945-50) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆயிரக்கணக்கில் ஏடுகள் இருந்திருக்கின்றன. வர்மம், வைத்தியம், சிலம்பம், மாட்டு வாகாடம், மந்திரவாதம், பழைய இலக்கியங்கள், கதைப்பாடல்கள் என குவிந்து கிடந்திருக்கின்றன. இந்த ஏடுகள் இருக்குமிடம் ஏடுகளின் தன்மை பற்றி, நாடார் வாய் வலிக்காமல் சொல்லிக் கொண்டே இருப்பார். தமிழகத்தில் சுவடித் தேடிச் சென்றவர்கள் உ.வே.சா.உட்பட பலரும் நெல்லையைத் தமது எல்லையாகக் கொண்டதால் பல தமிழ் ஏடுகள் கேரளச் சுவடிப்பாது காப்பகத்திற்குச் சென்றுவிட்டன. இதை எல்லாம் நன்கு தெரிந்த, மறைந்த தமிழறிஞர் டாக்டர். முத்துசண்முகம் பிள்ளை (மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர்) ஆறுமுகப் பெருமாள் நாடாரைப் பற்றி மு.வ.விடம் விரிவாகக் கூறியிருக்கிறார். பேராசிரியர் நா. வானமாமலை அவர்களைக் கொண்டு சிபாரிசு செய்யச் சொல்லியிருக்கிறார்.

ஆறுமுகப் பெருமாள் நாடார் தான் வெளியிட்ட எல்லா புத்தகங்களையும் சொந்தமாகவே வெளியிட்டிருக்கிறார். கன்னியாகுமரி கோவிலில் நடந்த களவு பற்றிய நிகழ்ச்சி அடிப்படையிலான "திருப்பணி களவு மாலை'' (1966) என்ற நூலுக்கு மட்டும் ஒரு செல்வந்தர் நிதி உதவி செய்திருக்கிறார்.

ஆறுமுகப் பெருமாள் நாடாரின் பதிப்பில் கதைச்சுருக்கம், அந்த நூலை அச்சில் கொண்டு வருவதற்குரிய காரணம், வில்லிசைப் பாடலை எழுதியவரின் பெயர், அவரின் காலம், சொந்த ஊர் பற்றிய விவரங்கள் இருக்கும். அகால மரண மடைந்தவர் வரம் பெற்று தெய்வமாகி கோவில்

பெற்று, வில்லிசைப் பாடலிலும் இடம் பெற்றுவிட்டால் அது பற்றிய செய்திகளையும் தந்திருப்பார். (எ.கா. பூலங்கொண்டாளம்மன் கதை) மூல நூலில், உள்ள யாப்பு வடிவங்களை அடையாளம் கண்டு (விருத்தம், தரு, வெண்பா, சிந்து, கண்ணி) பதிப்பித்திருக்கிறார். இவை எவையுமே முந்திய பதிப்பாளர்களிடம் முழுமையாக இல்லை.

ஆறுமுகப் பெருமாள் நாடாருக்கு, ஆய்வு நெறிமுறை, மூல பாடப்பதிப்பு முறை, அடிக்குறிப்பு இடுதல் போன்றனவெல்லாம் தெரியாது. குறிப்பிட்ட கதைப்பாடலைப் பதிப்பிக்கும்போது, அதற்குத் தொடர்பில்லாத பொருள் பற்றிய வேறு பாடல்களையும் அந்த நூலின் பின்னே தந்திருக்கிறார். ஆனால், இது அவர் தெரியாமல் செய்ததல்ல. 16 பக்க பாத்திரத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதற்காக அச்சு நிலையத்தார் கேட்டுக் கொண்டதற்கிணங்கச் சேர்த்தது என்று என்னிடமே ஒருமுறை சொன்னார்.

வில்லிசைப் பாடல் குறிப்பிடும் தெய்வம், அதன் வழிபாடு குறித்த செய்திகளையும், கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களின் கதை வேறுபாடுகளையும் அறிந்தவர் ஆறுமுகப்பெருமாள் நாடார் இதனால் இன்றும் மூலக்கதைவழி வில்லிசை நிகழ்த்த விரும்பும் கலைஞர்கள் ஆறுமுகப் பெருமாள் நாடாரின் பதிப்பையே சிராக்ஸ் எடுத்துக் கொள்கின்றனர். இவருக்கு முந்திய பதிப்பாளர்கள் நிகழ்ச்சியை நடத்துவதற்கென்றே பதிப்பித்தால் மூலக்கதையின் பகுதிகளைச் சுருக்கியிருக்கின்றனர். இதற்கு நல்ல உதாரணம் முத்தாரம்மன் கதை. இக்கதையின் இடைப் பகுதியில் வரும நாக கன்னி, தெய்வ கன்னி கதையின் எல்லாப் பகுதிகளையும் உள்ள பதிப்பு ஆறுமுகப் பெருமாள் நாடாரின் பதிப்பு ஒன்றுதான். முத்தாரம்மன் நெல்லைப் பதிப்பில், போர் வருணனை, காளி, முப்புராதியரின் புட்டாபுர நிகழ்ச்சிகள் இல்லை. ஆறுமுகப் பெருமாள் நாடார் முத்தாரம்மன் கதையைப் பதிப்பதற்கு மேற்படி ஏடுகளைப் பயன்படுத்தியதை அதன் முதல் பதிப்பில் (1949) கூறியிருக்கிறார்.

முத்துப்பட்டன் கதை, பிராமண வீரன் சக்கிலியப் பெண்ணை மணந்து கொலைப்பட்ட நிகழ்ச்சியைக் கூறுவது. இக்கதையை உயர்சாதியைச் சார்ந்த பார்வையாளருக்காக மாற்ற வேண்டிய கட்டாயம் வந்தததால் வில்லிசை நிகழ்ச்சியை நடத்திய கலைஞரும், பதிப்பித்தவரும் மாற்றியிருக்கின்றனர். இந்த மாற்றம் அடங்கிய பதிப்பை ஆறுமுகப்பெருமாள் நாடார் ஒதுக்கியிருக்கிறார். புன்னார் குளத்தில் அவருக்குக் கிடைத்த மூலஏட்டை அப்படியே பயன்படுத்தி வெளியிட்டார். நா.வானமாமலை பதிப்பித்த முத்துப்பட்டன் கதைக்கு ஆறுமுகப் பெருமாள் நாடாரின் பதிப்பைப் பெரிதும் பயன்படுத்தியிருக்கிறார்.

ஆறுமுகப் பெருமாள் நாடார் அய்யா வைகுண்டரின் படைப்பான அகிலத்திரட்டைப் பதிப்பித்திருக்கிறார். ஆனால் அவர் பெயரில் அந்த நூல் வரவில்லை. அதைப் பதிப்பித்ததற்கு ஒரு வரலாறு உண்டு. அய்யா வைகுண்டர். (1809-1851) ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடிய ஆன்மீகவாதி இவரது கருத்துக்கள் அடங்கிய பாடல்களே அகிலத்திரட்டு இந்த நூல் சாமிதோப்பு அய்யா, வைகுண்டரின் மரபினர் எட்டு பேருக்கு உரிமை உடையதாய் இருந்ததது. யாரும் அதை வெளியிட முடியாது என்றிருந்த சமயம் அறுபதுகளில் கூட இந்த நூலின் ஏட்டுப்பிரதியை வைத்தே படிக்கும் வழக்கம் இருந்தது. இந்த நூலின் பாடலைப் படிப்பதை "ஏடு வாசிப்பு" என்று படிக்கும் பழக்கம் இன்றும் உள்ளது.

ஆறுமுகப் பெருமாள் நாடார் அகிலத்திரட்டின் பிரதிகளை 60களில் தொகுத்திருக்கிறார். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள உடன்குடி, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சந்தையடி, தாமரைக்குளம், அகஸ்தீஸ்வரம் ஆகிய நான்கு ஊர்களில் இருந்த ஏடுகளின் அடிப்படையில் ஒரு நல்ல பிரதியை உருவாக்கியிருக்கிறார். இவை தவிர இந்த நூலை மனனம் செய்து வைத்திருந்த பலரைச் சந்தித்து விவாதித்திருக்கிறார். இப்படி உழைத்த நூல் சென்ற திசை வென்ற பெருமாள் நாடார் என்பவரின் பேரில் (1967) வந்திருக்கிறது.

ஆறுமுகப் பெருமாள் நாடார் அடிக்கடி சொல்லுவார் நம்மூர்க்காரனுக்கு இந்த வில்லுப்பாட்டுக்கு மதிப்பு தெரியாது. வெள்ளைக்காரனுக்குத் தெரியும் என்று. அவர் சொன்ன வெள்ளைக்காரன் Stuart H. Blackburn தான். பிளாக்பேர்ன் ஆறுமுகப் பெருமாள் நாடாரை 1977 அளவில் சந்தித்திருக்கிறார். பேராசிரியர் நா.வானமாமலையின் நண்பர் ரத்தினம் என்ற தையல்காரர், பிளாக்பேர்னை நாடாரிடம் அழைத்துச் சென்றிருக்கிறார். பிளாக்பேர்ன் நாகர்கோவிலில் இருந்த 18 மாதங்களில் பலமுறை நாடாரைச் சந்தித்திருக்கிறார். நானும் பிளாக்பேர்னும் இரண்டு மூன்று முறை அவரது வீட்டிற்குப் போயிருக்கிறோம். 1977 வாக்கில் ஒரு மழைக் காலத்தில், சுந்தர ராமசாமியின் வீட்டில் நடந்த காகங்கள் கூட்டத்தில் (அன்று திட்டமிடப் படாததால் குறைந்த நண்பர்களே இருந்தனர்) பிளாக்பேர்ன் வில்லூப் பாட்டைப் பற்றி பொதுவாகப் பேசிவிட்டு ஆறுமுகப் பெருமாள் நாடாரைப் பற்றி அரைமணி நேரத்துக்கு மேலாகப் புகழ்ந்து தள்ளிவிட்டார். பிளாக் பேர்ன் தன்னுடைய Singing of birth and death என்ற நூலை, பேராசிரியர் நா.வானமாமலைக்கும், ஆறுமுகப் பெருமாள் நாடாருக்கும் தான் சமர்ப்பித்திருக்கிறார். அதோடு தன் நூலின் (1988) முகவுரையில் "Ku. Arumugaperumal nadar, a bow song bard now deceased, shared his extensive knowledge of the tradition and argued with my observation giving much himself to a project whose purpose much he neverfully understood"என்று கூறுகிறார்.

பனை ஓலைகளிலிருந்து தமிழ் இலக்கியங்களை அச்சுப்புத்தகமாக மாற்ற ஆரம்பித்த காலகட்டத்தில் அது பெரிய தொண்டாக மதிக்கப்பட்டது. ஏடுகளைத் தேடுவதும், அவற்றை வெளியிட வேண்டும் என்ற முயற்சியும் செய்த தமிழ் அறிஞர்களுக்கிடையே போட்டி பொறாமைகூட இருந்தது. மூன்றாம் தர இலக்கியங்களை அச்சேற்றுவதில் அவசரம் காட்டிய காலம் கூட இருந்தது. இந்தக் காலகட்டத்தில் மலை மாதிரி குவிந்து கிடந்த நாட்டார் கதைப் பாடல்களை யாரும் தீண்டவில்லை. இதையும் மீறி சிலர் வெளியிடத்தான் செய்தனர். அவர்களுக்குச் சரியான மரியாதையும் கிடைக்கவில்லை.

தெருக்கூத்து, பாவைக்கூத்து போன்ற நாட்டார் கலைகளைச் சாதாரண பார்வையாளனுடன் அமர்ந்து பார்ப்பதே அந்தஸ்து குறைவாகக் கருதப்பட்ட காலத்தில் நிகழ்த்துக் கலைகளுக்குரிய பாடல்களை அச்சில் கொண்டுவ;ாதது பெரிய காரியமல்ல தமிழ் ஏடுகளை அச்சு நூல்களாக்கிய உ.வே.சா. தாமோதரன் பிள்ளை போன்ற பட்டியலில் ஆறுமுகப் பெருமாள் நாடாருக்கும் இடம் உண்டு என்பதை எதிர்காலம் தான் தீர்மானிக்க முடியும்.

ஆறுமுகப் பெருமாள் நாடார் பதிப்பித்த நூற்கள்

சுடலைமாடசாமி கதை (1949, 1952) ஜெயஜோதி அச்சகம், ராதாபுரம்.

அரிகரபுத்திரர் என்னும் காத்தா வரலாற்று விற்பாட்டு (1953, 56, 62) திருநெல்வேலி சங்கு நூலகம்.

அனந்தாயி கதை (1955), ஜெயஜோதி அச்சகம், ராதாபுரம்.

பிச்சைக்காலன் கதை (1959), சங்கு நூலகம், திருநெல்வேலி.

முத்துப்பட்டன் கதை (1962, 1965), கிருஷ்ணா அச்சகம், நாகர்கோவில்

முத்தாரம்மன் கதை (1949, 1962) நாகர்கோவில்

இசக்கியம்மன் கதை (1962, 65, 69) கருங்கல்

கிருஷ்ணசாமி கதை (1962) திருநெல்வேலி

திருப்பணி களவு மாலை (1966) தாணுமாலயபுரம்

தோட்டுக்காரி அம்மன் கதை (1967) திங்கள் சந்தை வலங்கை நூல் என்னும் மாகாளி கதை 1968, 1970 நாகர்கோவில்.

உவரி சுயம்புலிங்க சுவாமி விற்பாட்டு (1970) நாகர்கோவில்

மாரியம்மன் கதை (1971) நாகர்கோவில்

காலசாமி கதை (1977) திக்கணன்கோடு

வெங்கலராசன்கதை (1977) திங்கள் சந்தை

பார்வதி அம்மன் கதை (1978) நாகர்கோவில்

பூலங்கொண்டாள் அம்மன் கதை (1979) நாகர்கோவில்

வள்ளியம்மன் கதை தேகு. நாகர்கோவில்

சிறுபிரசுரங்கள்

(இவை 1948க்கும் 1972க்கும் இடைப்பட்ட காலத்தில் வந்தவை)

ராமநாமம் கெருடப்பத்து
கோவிந்தப்பதிகம் பத்து
முத்தாரம்மன் துதி
மீனாட்சி அம்மன் கலிவெண்பா
முத்தாரம்மன் கும்மி
மறைந்து கிடக்கும் மாணிக்கங்கள்
தேவார திருவாசக பஜனை
27 சில்லறைக் கட்டிடம்
அருள் நூல்
காமராஜ் புகழ்மாலை
மகாத்மா துக்க சிந்து
ஒப்பாரிக் கண்ணி நூறு
விடுகவிக் களஞ்சியம்
அப்புக்குட்டனை ஆனை கொன்றக் கதை
இரட்டைப் பழமொழி
சேவல் பாட்டு
முச்சீர் பழமொழி
ஆருட சாஸ்திரம்
திருக்கல்யாண வாழ்த்து
தாலாட்டு
ராட்டு மான்மியம்